ஸ்ரீமத் பகவத் கீதா

(தமிழில் ஸாராம்ஸம்)



A.N: 1477
R66.6
28/3
3124

C.K. நரஸிம்ஹாசாரி, மதுரை-9.
மாநிலத் தலைவர், ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி.

19-3

ஸ்ரீமத் பகவத் கீதா.

தமிழில் ஸாராம்ஸம்

கோவிலூர் ஆதீனம்
ACC. NO: 1477
R656
கோவிலூர்-630 307
1A77



ஆசிரியர் & வெளியிடுவோர்:

C. K. நரஸிம்ஹாசாரி

மாநிலத் தலைவர்: ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி,
17-A, கிருஷ்ணாபுரம் 2-வது தெரு,
காமராசர் சாலை, மதுரை-9.

1985

விலை: சிரத்தையுடன் படித்தல்

Title of the book	—	Shrimad Bhagavad Geeta
Subject	—	Substance of Geeta
Author	—	Shri C. K. Narasimhachari
Language	—	Tamil
Copy right holder	—	Publisher
Printer	—	Shri Shakthi Printers Kasi viswanathar north, Kumbakonam.
Publisher	—	Shri C. K. Narasimhachari 17-A, Krishnapuram Second Street Madurai-625 009. (Tamil Nadu)
Price	—	Reading with Devotion
Edition	—	Second Edition-1985.

19-3

ஆசியுரை

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதி.
தவக்குடில், சிவகங்கை. 623 560.

உலகெலாம் உவந்து ஓதும் ஒரே இந்திய நூல் பகவத் கீதையே. அதை, உலகத்தாய் என்கிறார் மஹாத்மா காந்தி. உலக வேதம் என்கிறார் பகவான் அரவிந்தர். வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிகாட்டி என்கிறார் லோகமான்ய திலகர்.

வேதப் பொருளே விண்ணின்மமுதே
சோதிச் சுடரே சுகநற்கனியே
ஆதிப்பொருளே அருளும் அறிவே
கீதைக் குயிலே கிளருள்ளிசையே!

கீதை ஜீவயோக சாதன விளக்கமாகும். கீதாசாரம் சஞ்சலத்தைப் போக்கி, வாழ்வை உயர்த்தும். ஆத்மவீறு நல்கும். காலை குளித்து, மடியுடுத்தி, சூரிய நமஸ்காரம் செய்து, கீதை சுலோகங்களை பொருளுடன் படித்து வந்தால் மனித வாழ்வு புனிதமாகும்.

தர்ம வீரத் திருவாளர் C. K. நரசிம்ஹாச்சாரியார் இந் நூலை எழுதி குறுஞ்சுவடியாக வெளியிட்டுள்ளார். அவர் ராஷ்ட்ரீய ஸ்வயம் ஸேவக சங்கம், ஆலயப் பாதுகாப்புக் குழு, சித்தாச்ரமம் இன்னும் பொதுநல நிலையங்களில் ஸத் கைங்கர்யம் செய்துவருகிறார். சனாதன தர்ம சீலராக, தொழிலும், எழிலும், வேதாகமப் பொழிலும் வளர்த்து, வளம்பெற வாழும் உத்தமர். அவர் எழுதியுள்ள கீதாசாரம், அவரது ஜீவன ரகசியமே.

தெள்ளிய தமிழில் எல்லோரும் இனிதுணரும்படி அமைந்துள்ள இந்நூலை அனைவரும் படித்து பயன்பெறுக. பாரத சமூகம் சுடரோங்கி வாழ்க. கீதாசாரம், சமுதாய வாழ்விலே திகழ்க. கண்ணன் கருணை புரிக.

பண்ணும் பணியும் பயனும் பரிசும்
எண்ணும் நினைவும் உனதே இறைவா
விண்ணும் புவியும் விளையா டுகிறாய்
கண்ணா கருணைக் கடலே சரணம்

சுத்தானந்த பாரதி.

மடமையை கொளுத்துவோம்

நாம் ஒவ்வொருவரும் நாம் பிறந்த சமுதாயத்திற்கு ஏதேனும் சேவை செய்வது அவசிய கடமையாகும்.

நம் ஹிந்து தர்மத்தை போற்றிக் காக்க,

1. தம் தம் தர்ம கர்மங்களை சிரத்தையுடன் செய்து, ஒழுக்கத்துடன் வாழ்ந்து பிறர்க்கு வழி காட்டலாம்.

2. தவறாது ஆலய வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை மூலம் பக்தி வளர்க்கலாம்.

3. வேத சாஸ்திரங்களை படித்தல், படிப்பித்தல் மூலம் ஞான வேள்வி நடத்தலாம்.

4. ஹிந்து தர்மத்தை இழிவு படுத்தும் பிற மதத்தவரையும், நாஸ்திகர்களையும் தன்மானத்துடன் வீறு கொண்டு எதிர்த்து, தர்மத்திற்கு உரமூட்டலாம்,

நற்பணிகள் எதுவும் செய்யாமல், தானும் தன் குடும்பமும் வாழ வேண்டும் என்ற சுயநல மடமையை இன்றே கொளுத்துவோம்.

சேவையில் இன்பம் காண்போம். எளிமையில் பெருமை கொள்வோம்.

ஓம்

ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி

நோக்கங்கள்

1. ஹிந்து ஆலய நிர்வாகத்தை அரசாங்கத்தின் பிடியிலிருந்து விடுவித்து தனித்தியங்கும் தெய்வ நம்பிக்கை கொண்ட சமய முன்னேடிகள் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப் பாடுபடுவது.
2. ஹிந்து ஆலயங்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பது.
3. ஆலயங்களை தெய்வீகத் தன்மை படைத்த புனித இடமாகவும், சமய வளர்ச்சி, சமுதாய ஒற்றுமை, ஆகியவைகளின் கேந்திரமாகவும் செயல்படச் செய்வது.
4. சமுதாய மக்களுக்கும், ஆலயங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவது.
5. ஹிந்து தர்மத்தின் சிறப்பினைப் பேணிப் பாதுகாத்து, உலகெங்கும் பரப்புவது.
6. ஹிந்து விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது.
7. இழந்த ஆலயங்களையும், சொத்துக்களையும், அவசியமெனில் போராடியும் மீட்பது.
8. அனைத்து ஹிந்து சமுதாய மக்களுக்கும் சமய, ஆலய நலன்களைப் பாதுகாக்க உரிமை வேட்கையையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துவது.

ஹிந்து தர்மம் காப்போம்
ஹிந்துக்களாக வாழ்வோம்

தொடர்பு கொள்ள முகவரிகள் :-

ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் குழு

1. 17-A, கிருஷ்ணபுரம் 2வது தெரு, மதுரை-625 009.
2. 33, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 003.
3. சேலம் ஸ்டோர்ஸ், கடைத்தெரு, சேலம்-636 001.
4. 5, கோதண்டராமன் காலனி 6வதுதெரு-மாயவரம் 629001

பிரார்த்தனே

என் உள்ளத்தில் உள்ள பரமாத்மனே! என் உயிர்ப்பெல்லாம் உனக்கே அர்ச்சனேயாகுக. என் மனம், மொழி, செயல் யாவும் உனக்கே நிவேதன மாகுக. என் யாக்கை நின் திருக்கோயிலாகுக. என் உள்ளம் உன் அன்பு நிலேயமாகுக. என் அறிவில் நின் சைதன்யக்கதிர் வீசுக.

நின் அருளால் நான் உலகில் தர்ம தூதனுக, கர்ம வீரனுக விளங்க அருள்வாய்.

உலகைப் பாழ்படுத்தும் ஆசை, ஆணவப் பேய்கள், பொருமைப் பூதங்கள், ஆகிய அதர்ம இயக்கங்கள் எல்லாம், என் சுத்த - சமத்துவ சக்தியின் முன் நடுநடுங்கி மறையும்படி செய், நான் உலகில், உத்தமனுய், புருஷோத்தமனுய். வீடும், நாடும் இன்புறத்தொண்டு செய்துகொண்டு வாழ அருள்வாய். விவேக ஞானம் கொண்டு பூரணனுக, நர நாரணனுக, நின் சரணடையஅருள்.

ஓம் தத் ஸத்

ஓம்

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மனே நம:

ஸ்ரீமத் பகவத் கீதை ஸாராம்ஸம்

எழுதியவர்: C. K. நரஸிம்ஹாசாரி, மதுரை-9.

(மாநிலத் தலைவர், ஹிந்து ஆலய பாதுகாப்புக் குழு)

நுழை வாயில்.

நமது பாரதப் பண்பாடுகளின் அடிப்படையே, நம் வேத சாஸ்திரங்களும் இதிஹாஸ புராணங்களும் தான். ராமாயணமும் மஹாபாரதமும் நம் அன்றாட வாழ்வில், பாவும், ஊடு நூலும் போல பின்னிக்கிடக்கின்றன. அவற்றில் மஹாபாரத நூலில் அமைந்துள்ள ஞானக் கருவூலம்தான் ஸ்ரீமத் பகவத் கீதையாகும்.

உலக இலக்கிய நூல்களுள் கீதையைப்போன்று மக்கள் மதியை துலக்கும் மற்றொரு நூல் கிடையாது. எல்லோருக்கும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய இவ்வழிகாட்டி நூலை 300க்கு மேற்பட்ட மொழிகளில் உலகத்தோர் மொழி பெயர்த்துப் பயனடைந்திருக்கிறார்கள். நமது முன்னோர்கள் இதைப் பல கோணங்களில் ஆராய்ந்து விளக்கம் எழுதியிருக்கிறார்கள்.

மேல்நாட்டவர், பாரத நாட்டை ஞான பூமியாகக் கருதுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் கீதையுமாகும். லண்டனிலுள்ள மாபெரும் நூல் நிலையத்தில் மக்களால் இன்றும் அதிகமாக வாங்கிப் படிக்கப்படும் ஆன்மீக நூல் கீதையாகும்.

வாழ்க்கையில் துயரம், குழப்பம் வருங்கால், கீதையிடம் சரண் புகுந்து நிச்சயமாக ஆறுதல் பெறலாம்.

கீதையின் சாரம் கடமையும், தியாகமுமே. புறப்பொருள்களைத் தியாகம் செய்வது தொடங்கி, ஈறாக, ஆத்மீக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக நிற்கும் ஆணவம், காமம், பேராசை, பொறாமை, பகைமை இவற்றைத் தியாகம் செய்ய வழி சொல்கிறது. அழியும் பொருட்களிடம் பற்றறுத்து, அழியாப் பொருளைப்பற்ற போதிக்கிறது. சுயநலம் விடுத்து கடமைகளைச் சரிவரச் செய்வதோடு, பலனை இறைவனுக்கு அர்ப்பணித்துவிட நம்மைத் தூண்டுகிறது.

ஒரு லக்ஷம் சுலோகங்கள் கொண்ட மஹாபாரத நூலில், பீஷ்மபர்வத்தில் இந்த கீதை வருகிறது. 18 அத்யாயங்களில் 700 சுலோகங்கள் கொண்ட கீதை, 32 எழுத்துக்கள் கொண்ட அனுஷ்டுப் சந்தஸாக அமைந்திருக்கிறது. பாராயணம் செய்யும்பொழுது எட்டெட்டு எழுத்துக்கள் கொண்ட பாதத்தில் இடைநிறுத்திப் பாடுகிறோம்.

ஆரோக்யமான உடலும், ஆரோக்யமான உள்ளமும், வாழ்க்கையில் வெற்றியும் வேண்டுவோர் அடிக்கடி கீதையைப் படிக்க வேண்டும். கற்றறிந்தோரைப்பணிந்தும், பணிவிடை செய்தும், விளக்கம் பெறுதல் வேண்டும்.

ஆடம்பரத்தில் போகத்தில் ஓடி ஆடி வாழ்க்கை வீணான பிறகு ஞானம் தேடுவது பகுத்தறிவல்ல. கொள்ளைபோன பின் கொல்லையை மூடுவதுபோன்ற மதியீனமாகும். இளமையிலேயே நற்பண்புகளைப் பயிரிட்டு வளர்த்துக்கொள்வது தான் புத்திசாலியின் லக்ஷணம்.

புலனடக்கத்துடன் கீதை வழி நடந்து, நம் குடும்பத்திற்கும், ஹிந்து சமுதாயத்திற்கும் புகழ் சேர்க்கும் உத்தமப் பிரஜைகளாக ஆவோம். நம் முயற்சிகளுக்கு யாண்டும் இறைவன் துணை உண்டு.

இனி கீதையெனும் ஞான கூடத்தில் நுழைவோம்.

★

ஸ்ரீமத் பகவத் கீதா ஸாராம்ஸம்

முதல் அத்யாயம்

அர்ஜுன விஷாத யோகம்

மஹாபாரதயுத்த ஆரம்பத்தில், கண்ணில்லாத திருதராஷ்ட்ர ராஜன், ஹஸ்தினாபுரத்து அரண்மனையில் இருந்து கொண்டே, போர்க்களத்துச் செய்திகளைத் தனக்குச் சொல்லும்படி, ஸஞ்ஜயன் என்ற மந்திரியை நியமிக்கிறான். வேத வியாஸர் அருளால் ஞானதிருஷ்டி பெற்றவனான ஸஞ்ஜயன் களத்தில் நடந்தவற்றை திருதராஷ்ட்ரனுக்குச் சொல்லுகிறான்.

குருக்ஷேத்திரத்தில், இரு மருங்கிலும் தனது உறவினரையும், ஆசிரியர்களையும் அர்ஜுனன் கண்டான். அவர்கள் மீது பாசமும் பக்தியும் மேலிட்டு, அதனால் கலக்கமடைந்தும் சோர்வுற்றும், வில்லையும் அம்பையும், நழுவவிட்டு தேர்த் தட்டில் உட்கார்ந்து விட்டான்.

யாருக்காக நாம் அரசும் போகமும் விரும்புகிறோமோ, அந்த ஆசாரியர், தாதையர், தனயர், முதலியோரைக்கொன்று, எந்த மண்ணரசும் சுகமும்வேண்டேன் என்று கண்ணனிடம் சொல்லி, தனக்கு நன்மை தருவனவற்றை உபதேசிக்குமாறு அர்ஜுனன் வேண்டினான்.

ஒரு விஷயத்தை விசாரித்துத் தெளிவதற்கு முன், குழப்பமும் ஆர்வமும் ஏற்படலாம். ஆகையால்தான், இந்த முதல் அத்யாயம் அர்ஜுனன் கலக்கமடைந்த படலம் என்று அமைந்தது.

இரண்டாம் அத்யாயம்

ஸாங்க்ய யோகம்

போர்புரிய மனம்வராமல் திகைத்துத் தன்னைச் சரணடைந்த அர்ஜுனனை நோக்கிக் கண்ணன் உரைக்கின்றான்:- அர்ஜுனா! நீ வருந்துவது முற்றி லும்தவறு. எதிரிகளின் ஆத்மாவைப்பற்றி வருந்து கிறாயா? அல்லது அவர்களின் உடலைப்பற்றி வருந்து கிறாயா? (இரண்டும் சரியல்ல.) ஆத்மா என்றும் அழிவற்றது. அதைக் கத்தியால் வெட்டவும் தீயினால் எரிக்கவும் முடியாது. ஆனால் சரீரம் அழியக்கூடியது. சரீரம் என்றாலே, மாளும் இயல் புடையது என்று பொருள். ஜீவன், தன் கர்மாக் களின் பலனை அனுபவிக்க உரிய இடமாக, க்ஷேத்ரமாக சரீரம் அமைந்துள்ளது. எனவே கர்மம் கழிந்ததும் சரீரம் அழிந்தே தீரும். நீ போரில் அழிக்காவிடினும், அது ஒரு நாள் அழிய வேண்டி யதுதான். ஆத்மா ஒரு சரீரத்தினின்று மாறுவது, ஒருவன் பழைய ஆடையைக் களைந்து, புது ஆடை அணிவது போலாகும். ஒருடல் அழிந்ததும், மற் றோருடல் தானே வந்து சேரும். ஆத்மா, சரீரம், இவற்றின் இந்த இயல்பை அறிந்து உனக்குரிய கடமைகளை நீ செய்தே தீரவேண்டும்.

வினைப்பயனில் உரிமையைப் பாராட்டாமல் நீ வினையாற்றக் கடமைப்பட்டுள்ளாய். வினையாற் றாமல் வெறுமனே இருக்கக்கூடாது; இருக்கவும் முடியாது. எனவே, இன்பம் - துன்பம், லாபம் - நஷ்டம் ஆகியவற்றைச் சமமாகக் கருதி உன் தர்ம கர்மங்களைச் செய்.

பார்த்தனே! ஆமை தன் அவயவங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்வது போல, விவேகத் தால், உலகயியல்களிலிருந்து பொறிகளை உள்ளி

முக்கவல்லவனே 'ஸ்திதபிரக்ஞன்' என்று அறிவாய் எனக் கண்ணன் உபதேசிக்கிறார்.

'ஸ்திதபிரக்ஞன்' எனும் நிலைத்த அறிஞனின் லக்ஷணங்களை அர்ஜுனன் வினவ பகவான் விளக்குகிறார்:-

துயர் வருங்கால் தொல்லைப் படாமலும், இன்பங்களால் பூரித்துப் போகாமலும், ஆசை, அச்சம், சினம் இவைகளைத் தவிர்த்தும், விருப்பு வெறுப்புக் கொள்ளாமலும் புலன்களைத் தன்வயப்படுத்தியும், இறுதியில் ஆத்மஞானத்தால் ஆத்ம சந்தோஷம் அடைபவனே ஸ்திதபிரக்ஞன் ஆவான் என மொழிந்தார்.

ஸாங்க்யயோக சாஸ்திரத்தில் காணும், ஆத்ம அடிப்படை தத்வங்கள் விளக்கப்படுவதால் இவ்வத்யாயத்திற்கு சாங்க்யயோகம் என்னும் இப்பெயர் அமைந்தது.

மூன்றாம் அத்யாயம்

கர்மயோகம்

ஞானமே சிறந்தது என்றால், போர் வினையில் ஏன் என்னை புகுத்துகிறாய்? என்று அர்ஜுனன் வினவ, பகவான் பகர்கிறார்:

கர்மயோக ஞானயோகங்களுள் ஞானயோகமே விரைவில் பலனையளிக்குமென்றாலும், கர்மயோகமே முதலில் செய்யத்தக்கது. கர்மயோகம் செய்யாவிடில் ஞானயோகமே சித்தியாது. நிஷ்காம்ய கர்மங்கள் செய்து சித்தசுத்தி அடைந்தால்தான், பக்தி, ஞானயோகங்கள் படிப்படியாக

சித்திக்கும். யாக்கை இருக்கும் வரையில் மனிதன் ஏதாவதொரு கர்மத்தைச் செய்வதே நியதியாகும்.

ஒருவன் செயலற்றிருக்க முயன்றாலும், சத்துவாதி குணங்களால் புலன்கள், அவனை இழுத்து ஏதேனுமொரு செய்கையிலேயே கொண்டு வந்து நிறுத்தும்.

இந்திரியங்களை அடக்கி ஞான நிலையில் நிற்கும் பக்குவம் வாய்ந்தவனும், கர்மங்களையே செய்யக் கடவன். ஏனெனில், இவனது ஞான நிலையறியாத பாமரர்கள் இவனைப் பார்த்து, தாங்களும் கர்மங்களை விட்டு ஞானத் துறையில் துணிவுறுவார்கள். அதனால் அப்பாமரர்கள் கர்மயோகத்தை இழந்தது மன்றி ஞான யோகத்தையுமிழந்து தாழ்ந்த நிலைக்கு வந்து விடுவார்கள். அவர்கள் கெடுவதற்கு இவனே காரணமாவான். எனவே, ஜனகர் போன்ற ராஜரிஷிகளும் கர்மயோகத்தை அனுஷ்டிக்கவே செய்தார்கள்.

மேலும், வேதங்கள் வேள்வியை கர்மமென விதிக்கின்றன. அறவேள்வியால் மழைபொழிய, மழையால் உணவு விளைகிறது. உணவால் உயிர்கள் வாழ்கின்றன. இந்த சிருஷ்டி சக்கரத்தை உணர்ந்து, நாம் உண்ணும் உணவை, நன்றி உணர்வுடன் ஆண்டவனுக்கு நிவேதனம் செய்தே உண்ண வேண்டும். அவ்வாறு செய்யாதவன் நன்றி கொன்றவனாவான்.

கர்மங்களைச் செய்யும்போது, 'இந்நிலைமை எனக்கு ப்ரக்ருதி சம்பந்தத்தால் வந்தேறியதென்றும், ஈச்வரனுடைய கட்டளையினால், அவனுதவியைக் கொண்டு, அவனுடைய ப்ரீதிக்காகவே செய்கிறேன், என்றும் எண்ணிச் செய்யவேண்டும்.

முக்குண இயல்புகளை அறிந்த ஞானி, அவைகளின் குண விகாரங்களில் சிக்க மாட்டான். ஆதலின் வீரனே நீ உன் கடமையை உணர்ந்து போரைச் செய்யவே வேண்டும்.

சுத்தமான உள்ளத்துடன் எல்லாச் செயல்களையும் எனக்கே அர்ப்பணம் செய்' என்று பகவான் உபதேசித்தார்.

இவ்வாறு 'கர்மயோகம்' எனும் வினை வேள்வியின் உயர்வை பகவான் இவ்வத்தியாயத்தில் விளக்குகிறார்.

நான்காம் அத்யாயம்

ஞான கர்ம ஸங்யாஸ யோகம்

இவ்வத்யாயத்தில் பகவத் அவதார ரஹஸ்யத்தை விளக்கி, அந்த ரஹஸ்யத்தை உணர்ந்த ஞானி, கர்மயோகத்தின் மூலம், பயன் துறவு, எனும் கர்மஞானஸந்யாஸம் எய்தும் வகைகளைத் தொகுத்துக் கூறுவதால், இந்த அத்யாயம் இப்பெயர் பூண்டது.

கண்ணன் அருளுகிறான்: உலகத்தைப் படைக்கும் போதே இந்த ஞான கர்ம யோகத்தை நான் சூரியனுக்கு உபதேசித்தேன். பிறகு மனுவின் வழியாக உலகில் அது பரவிற்று என்று சொல்லி கண்ணன் தமது அவதார ரகசியத்தைக் கூறுகிறார்.

அர்ஜுனா! எனக்கும் உனக்கும் பிறவிகள் பல. அவைகளை நீ அறியாய்; யான் அறிவேன். நான் பிறப்பற்றவன்; அழிவற்றவன். எல்லா உயிர்களுக்கும் இறைவனாக இருந்தும், ப்ரகிருதியை வசப்படுத்தி, என் மாயையால் நான் அவதரிக்கிறேன்.

பாரதா! எவ்வெப்பொழுது அறத்திற்கு அழிவும், அதர்மத்திற்கு ஆக்கமும் எய்துமோ, அவ்வப்போது நான் என்னைப்பிறப்பித்துக் கொள்கிறேன். நல்லோரைக் காக்கவும், பொல்லாரை அழிக்கவும், அறத்தை நிலை நாட்டவும் நான் யுகந்தோறும் தோன்றுகிறேன். அர்ஜுனு! எனது திவ்ய அவதாரத்தையும் செயலையும் உள்ளபடி அறிபவன், பிறவிக்கடல் தாண்டி, என்னையே அடைகிருன்.

குணத்திற்கும் செயல்களுக்கும் ஏற்ப, நான்கு வர்ணங்களை நான் படைத்தேன். அவைகளுக்கு நானே கர்த்தா எனினும், எனக்கு கர்மபலனில் ஆசை இல்லாததால், நான் கர்மாக்களற்றவன், அழிவற்றவன் என்று அறி. இதை முன்னேர்கள் அறிந்து தம் தர்ம கர்மங்களைச் செய்தது போல, அவர்கள் வழியில் நீயும் வினைகளைச் செய்.

யார் என்னை எப்படி வழிபடுகிருர்களோ, அவரவர்களுக்கு நான் அவ்வப்படியே அருள் புரிகிறேன்.

உலகில் பலர் பலவித அறக்கர்மங்கள் செய்கின்றனர். சிலர் பிரஹ்மாக்கினியில் தம்மையே அர்ப்பணம் செய்து, பிரஹ்மத்தில் லயித்திருப்பர். சிலர் தேவதைகளுக்கு யாகம் முதலிய வேள்வி வழிபாட்டை செய்கின்றனர். சிலர் ஞானவேள்வியால் ஆத்மாவையே அர்ப்பணம் செய்து, பரபோதம் பெறுகின்றனர். சிலர், வைராக்யத்துடன், உட்கரணத்தையும் புலன்களையும் அடக்கி, ஸமம்-தமம் இவற்றைப் பழகுகின்றனர்.

சிலர் தங்கள் செல்வத்தைக் கொண்டு திரவிய யக்ஞம் எனும் அருட்பணிகள் செய்வர். சிலர் தவம், யோகம், கல்விப்பயிற்சி, முதலிய நல் விரதங்கள் வளர்ப்பர். சிலர் பிராண அபான

சுவாசங்களின் போக்கை முறைப்படுத்திப் பிராணு யாமம் செய்வர். சிலர் ஆகார நியமத்தால் பிராணனை, சூக்ஷ்ம பிராணனில், ஹோமம் செய்கின்றனர்.

இப்படிப் பலவகை வேள்விகளையும், வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்ற கர்மங்கள் என்றறிந்து இறுதியில் இக்கர்மங்களையும் துறப்பாயாக.

மனநிறைவு கொள்பவன், வினைப்பயனில் பற்றற்றவன், ஆசை, பொருமை அற்றவன், மனதையும் உடலையும் அடக்கியவன், தனக்கென உடமை விரும்பாதோன், உடல் வினையாற்றுபவன், எதேச்சையாக கிடைப்பதைக் கொண்டு மகிழ்பவன், வெற்றி தோல்விகளில் சமசித்தன், இவர்கள் எந்தச் செயல்களை நன்ருகச் செய்தாலும், செய்கையற்ற அகர்மியாவார்கள்.

கர்மம், அகர்மம் எனும் செய்யத்தக்கது செய்யத்தகாதது, செயலின்மை ஆகியவைகளின் இயல்புகளை பகவான் விவரித்து, கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவன் மேதாவி, யோகியாவான் என்று அருளுடன் மொழிந்தார்.

பாரதா! கர்மம் முழுதும் ஞானத்தால் முற்றுப்பெறுகிறது. உண்மை உணர்ந்த பிரம்ம ஞானிகளிடம் பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும், ஞானத்தைப்பெறுக. பரமாத்ம ஞானத்தைப்போல் தூய்மை தரும் பாங்குடையது வேறெதுவுமில்லை. அறிவுத்தீ, வினைகளனைத்தையும் நீக்கும்.

மடமையால் தோன்றிக் குடிக்கொள்ளும் ஐயுறவை ஞானவாளால் வெட்டு. புத்தி யோகத்தைக் கைக்கொண்டு எழுந்து நில். எழு!

விழி! செய்! என பகவான், பார்த்தனைத் தட்டி எழுப்புகிறார்.

ஐந்தாம் அத்யாயம்

ஸந்யாஸ யோகம்

நிஷ்காம்ய கர்மத்தை வெகுவாகப் புகழ்ந்து, பின் வினைகளைத் துறக்கவும் சொல்வதைக் கேட்ட அர்ஜுனன், அவைகளில் சிறந்தது எது என உறுதியாகக் கேட்கிறான்; கண்ணன் விளக்குகிறான்:—

கர்ம யோகத்தில் ஞானபாகம் அடங்கியிருப்பதாலும் ஞானயோகத்தில் கர்மபாகம் அடங்கியிருப்பதாலும், இரண்டும் ஒரேவிதமான பலனைக் கொடுக்கக் கூடியவை. ஒன்றை நன்கு கடைப்பிடித்தவர், இரண்டின் பயனையும் பெறுவர். எனினும் கர்ம சந்யாசத்தைவிட, கர்மயோகமே மேலானது.

கர்மயோகமின்றி துறவு கடினம். எனவே கர்மயோகம் செய்யும் முனிவன் விரைவில் பிரம்மத்தை அடைகிறான்.

கர்மயோக நிஷ்டன், தெளிந்த மனத்தோன், உடலை வென்று இந்திரியங்களை அடக்கியவன், தனது ஆத்மாவே அனைத்து உயிர்களுக்கும் உள்ள ஆத்மா எனக் காண்பவன், எந்தக் கர்மம் செய்யினும், அவைகளால் கட்டுண்பதில்லை. அவன் கற்றறிந்த அந்தணனிடமும் மாமிசம் உண்டு வாழும் புலையனிடமும், யானையினிடமும், நாயினிடமும் சமதிருஷ்டியை வைப்பான்.

தத்துவம் தெரிந்த யோகி, பிறர்போல் பார்க்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், அருந்தினும், நடக்கினும், உறங்கினும், பேசினும், கர்மபந்தப்படுவதில்லை. பொறி புலன்கள் செயலாற்றுகின்றன என்று உறுதிகொண்டு, நான் எதுவும் செய்கிறேனில்லை; நான் முக்குணம்கடந்த சுத்தாத்மா எனக்கருதியிருப்பான். தாமரையிலையில் தண்ணீர் போல அவனிடம் வினைப்பயன்கள் ஒட்டா.

இறைவன் ஆதியில் வினைகளையும், வினைப் பயனையும் உலகுக்கு உண்டு பண்ணவில்லை. ப்ரக்ருதி எனும் இயற்கையே இவ்வாறு செய்கிறது. அறிவை, மடமை மறைப்பதால், உயிர்கள் மயக்கமடைகின்றன. அந்த மடமையை ஆத்ம ஞானத்தால் ஒழிப்பவனுக்கு, அந்த ஆத்மஞானம் சூரியனைப்போன்று, பரம் பொருளை விளக்கிக்காட்டும். ஆத்மாவில் விளையாடி, ஆத்மாவில் இன்பம் துய்த்து, ஆத்மாவில் உள்ளொளி காணும் யோகி, தானே பிரம்மமாகி பிரம்ம நிர்வாணத்தை அடைகிறான்.

புறப்பற்றுகளை வெளியே முடக்கி, புருவ நடுவே பார்வையை நிறுத்தி, பிராண-அபான மூச்சுக்காற்றை நெறிப்படுத்தி, புலன்-புத்திகளை வென்று, ஆசை, வெகுளி, அச்சமொழித்து, உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்வதில் இன்புற்று, பிரம்ம சொரூபத்தை எப்பொழுதும் மனதில் ரமிக்கும் முனிவன், ஜீவன் முக்தனாவான் என்று பகவான் விளக்கினார்.

ஸம்-ந்யாஸம் என்றால் நன்றாக விட்டுவிடல் என்று பொருள். மாயையையும், கர்ம பந்தங்களையும் விட்டொழித்து ஸன்யாஸம் பேணுவது என்பது, பொறுப்புமிக்க தவ வாழ்க்கையாகும்.

எனவே ஸந்யாஸ வாழ்வில் தியாகமும் தொண்டும் மேலோங்கி நிற்க வேண்டும்.

ஆறும் அத்யாயம்

ஆத்ம ஸம்யம யோகம்

கர்மயோக, ஞான யோகங்களுடன், தியான யோகப்பயிற்சியும், அதனுல் ஏற்படும் ஆத்மானுபவமும் இந்த அத்யாயத்தில் கூறப்படுகிறது.

குந்திபுத்ரா ! யோகநிஷ்டையின் மூலம், தியான சித்தி அடைந்தவன் வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தமாட்டான். தேக சம்பந்தத்தை நீக்கிப்பார்த்தால், எல்லா ஆத்மாக்களும் ஒரேவகைப் பட்டவை என்று அறிவான். முடிவில் கடவுளும் அவ்வாத்மாக்களும் ஒன்றே என உணர்வான்.

அவனுக்குத் தோழன் - பகைவன் - நல்லவன் - கெட்டவன் என்ற வேறுபாடின்றி எல்லோரிடமும் ஒரே விதமான மனப்பான்மை ஏற்படும்.

கர்மயோகியானவன் ஆசர்பாசங்களை அடியோடு விட்டொழித்து, மனதை ஆத்மாவில் செலுத்தி த்யானயோகத்தைப் பயிலவேண்டும். உணவு, உறக்கம், அன்றாட வினை இவைகளை அளவுடன் கைக்கொள்வது மிக அவசியம்.

நிச்சப்தமான தனியிடத்தில், துணி, தர்ப்பை அல்லது மான் தோலை விரித்து, திடமான ஆசனத்தின் மேல், கோணுமல் அமர்ந்து, சித்தவிருத்திகளைக் கட்டுப்படுத்தி, மூக்கு நுனியில் பார்வைய்யை நாட்டி, மனதை ஒருமுகப்படுத்த வேண்டும்.

மனம் சஞ்சல இயல்புடையது; அடக்குதற்கரியது. வைராக்யத்தாலும், அப்யாஸத்தாலும், அதை வசப்படுத்திஞல், பிறகு படிப்படியாக ஆத்ம யோகம் சித்திக்கும். தியான சித்தி அடைந்தவனுக்கு செயலற்றிருப்பது உபாயமாகி விடுகிறது. அந்த ஆத்ம சுகானுபவத்திலே நின்று மகிழ்வான்.

விஜயனே! சிரத்தையுடன் யோகம் செய்யத் தொடங்கியவன், பின்பு, திடவைராக்யமின்மையால், தொடர்ந்து செய்யத்தவறி விட்டாலும் அவனுக்குத் தீங்கு ஏதும் இல்லே. அவன் யோக ப்ரஷ்டன் எனப்படுவான். எந்தபோகத்தில் ஆசை கொண்டு யோகத்தில் தவறினுஞே, அந்த போகத்தை அனுபவித்த பின் சான்ருேரின் குலத்தில் பிறந்து, மறுபடியும் அந்த யோகத்தைத் தொடருவான். பலபிறவிகளில் முயன்று, சப்த பிரம்மமான வேதத்தையும் மிஞ்சிச்செல்வான்.

யோகசித்தி அடைந்தவனுக்கு குளிர் - வெப்பம், இன்ப - துன்பம், பெருமை - சிறுமை ஆகிய எதிலும் ஆத்மஞானம் பிறழாமல் - சமமாக நிற்கும். அவன் யோகாரூடன், கூடஸ்தன், எனப்படுகிருன். ஆதலால், அர்ஜுனு! நீ யோகியாவர்யாக! என்று கண்ணன் உபதேசித்தார்.

ஏழாம் அத்யாயம்

ஞான விக்ஞான யோகம்

புலனறிவால் அறிவதை ஞானமென்றும், சுவானுபூதி எனும் மெய்ஞானத்தால் அறிவதை விக்ஞானமென்றும், தெளிவாக அறிய வேண்டும். உலகியலில், பௌதீக அறிவை விஞ்ஞானம் என்கிருேம். சாஸ்திரங்களில் வரும் விக்ஞானம் எனும்

சொல், விசேஷ ஞானமாகிய மெய்ஞ்ஞானத்தைத் தான் குறிக்கும்.

பக்தி யோகத்திற்கு இலக்கான இறைவனுடைய ஸ்வரூபம், ஸ்வபாவம், ஸார்வபௌமத்வம் முதலியன இந்த அத்யாயத்தில் விளக்கிக் கூறப்படுகின்றன. ஒரு பொருளின் அல்லது இயக்கத்தின் மேன்மையையும் உயர்வையும் அறிய அறிய நமக்கு அதன்பால் அளவற்ற மரியாதையும் பக்தியும் ஏற்படுவது இயற்கை. பகவானின், விபூதி, பலம், சக்தி, ஐசுவரியம் ஆகிய திவ்ய குணங்களையும், அவனே அனைத்து ஜீவன்களின் சநாதனபீஜம் எனவும், ஐயமறத் தெரிந்து கொள்வது, பக்திக்கும், பூரண சரணாகதிக்கும் இன்றியமையாதது.

பஞ்சபூதாதி அபர பிரகிருதியும், ஜீவபூதமாகிய பரபிரகிருதியும், அவனே. உலகனைத்தின் சிருஷ்டி, பிரளயம் இவற்றின் காரணமும் அவனே. மேலும், நீரில் சுவையும், சூரிய சந்திரர்களிடத்து ஒளியும், வேதங்களில் ஓங்காரமும், மக்களிடத்து ஆண்மையும் அவனே பூதநாதனான அதிபூதனும், வேததேவனான அதிதைவமும், கேள்வித்தலைவனான அதியக்ஞனும் அவனே, என உறுதியுடன் அறிய வேண்டும்.

பகவான் அருளுகிறார்:— பார்த்தனே! பரமாத்ம ஸ்வரூபத்தை, அறிய வொட்டாமல் சத்துவாதி ப்ரக்ருதி ஸம்பந்தம் தடுத்துக் கொண்டிருப்பதால் இதை முயன்று வெல்ல வேண்டியது அவசியம். இறைவனைச் சரண்புகுந்தாலன்றி இம்மாயையை நீக்க இயலாது.

பக்தர்களுள், துன்புற்றவன், செல்வத்தை விரும்புவோன், ஞான வேட்கையுடையவன், பரம் பொருளைப் போற்றுபவன் என நான்கு வகை

உண்டு. அவர்களில் இறைவனை உணர்ந்த நான் காம் வகுப்பினரே மேலானவர்.

மனிதர்கள், தங்கள் இயல்பிற்கு உட்பட்டு, வேறு பல தேவதைகளை வழிபடுகின்றனர். அவர் அந்த தேவதைகளை நம்பிக்கையுடன் ஆராதனம் செய்வதனால், விரும்பிய பலனை அடைவர். அந்தப் பலனை வகுத்துக் கொடுப்பதும் நானே. அற்ப மதி யுள்ளவர்கள் தேடும் காம்ய பலன்கள் அழியக் கூடியவை. முழுமுதற் காரணமான என்னை வழி படும் பக்தர்கள், என்னையே அடைந்து, அழி வில்லாப் பரமானந்த நிலையைப் பெறுகின்றனர்.

இந்த் மேலாம் ஞானத்தை பெறுவது எளி தல்ல, பல பிறவிகளின் முடிவில் தான் ஒருவன் என்னை அறிந்து, 'வாஸுதேவ ஸர்வமிதி' என்று உணர்கிறான்.

—★—

எட்டாம் அத்யாயம்

அக்ஷர ப்ரஹ்ம யோகம்

ஏக அக்ஷர ப்ரஹ்மமாகிய ஓங்காரத்தை தியானிப்பது குறித்தும், பரமபத மார்க்கங்களின் விரிவும், எக்காலத்தில் மரணமேற்பட்டால் என்ன பிறவி எடுப்பான் என்பன போன்றவைகளும், காலங்கள் பற்றியும், இவ்வத்யாயத்தில் விளக்கப் படுகின்றன.

அத்யாத்மம், அதிபூதம், அதிதைவம், அக்ஷர பிரம்மம், ஆகியவற்றின் விளக்கத்தை அர்ஜுனன் கேட்க, பகவான் விளக்குகிறார் :—

அர்ஜுனா! அழிவற்ற பரம்பொருளே அக்ஷர பிரஹ்மம். உடல், உயிர், மனம் புத்தியுடன் கூடிய ஜீவஸ்வபாவமே அத்யாத்மம். தோன்றி மறையும் பூதவியவகாரங்களைக் குறித்தது அதிபூதம். இந்திரன், பிரஹ்மா முதலிய தேவதைகளைத் தன் உடலாகக் கொண்டிருக்கும் ஹிரண்மய புருஷனே அதிதெய்வம். ஜீவயக்ஞத்தை நடத்த இங்கே இந்த உடலில் கேள்வி ட தல்வனாக இருப்பவனே அதியக்ஞன். நானே இவையனைத்துமாக இருக்கிறேன்;

யாக்கையினின்றும் ஆவி வெளியே கிளம்புங்கால் எத்தகைய எண்ணம் மனிதனின் மனதிற்குள் இருக்கிறதோ அத்தகைய பலனையே மறுபிறவியில் பெறுவானாதலால் பக்தர்கள் இறக்கும் தருணத்தில் என்னை தியானித்திருப்பது அவசியம். வாழ்நாட்களில் மனதை என்னிடம் நிலைத்திருக்கச் செய்யும் பழக்கத்தை உண்டுபண்ணினால்தான், மனம், கண்டசி காலத்தில் என்னை நினைக்கும். ஆகையால், பக்தர் அனைவரும் மனதால் என்னை தியானம் செய்து கொண்டே தங்கள் அன்றாட வேலைகளைச் செய்து பழகவேண்டும். **மறவா நினைவே பிறவா வழியாம்**.

பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் இவைகளில் இறக்கும் ஜனங்கள் நற்கதி அடைகின்றனர். இதற்கு மாறாக இறப்பவர்கள், தமது கர்ம பலன்களை அனுபவித்து, மறுபிறவியெய்துவர். பக்தர்கள் இறந்த பிறகு ஆத்மா செல்லும் வழி அர்ச்சிராதி மார்க்கம், தூமாதி மார்க்கம் என, இருவகைப் பட்டிருக்கும். ஒளிமார்க்கத்தில் சென்றால் என்றைக்கும் திரும்பிவராத வீட்டைப் பெறலாம். தூமாதி எனும் புகை மார்க்கத்தில் சென்றால் காலக்கிரமத்தில் திரும்பிவர வேண்டும் தற்காலிக இடத்தையே அடையலாம்.

கோவிலூர் மடாலயம்

பரமாத்மாவின் உயர்வு நிலே விவரிக்க ஒண்ணுதது. அவன் முற்றும் அறிந்தவன், புராணன், அந்தர்யாமியாயிருந்து அனைத்தையும் ஆளுவோன், அணுவினும் நுண்மயன் அதி சூக்ஷ்மன், அனைத்தையும் தாங்குவோன், ஆதித்ய வர்ணன், நித்ய சேதன பிரகாசன், சிந்தனைக்குரிய வடிவோன்.

இவ்வாருன அனந்த கல்யாண குணங்களே அந்திம காலத்தில் எவன் ஸ்மரிக்கின்ருனே, அவன் பரமபதம் எனும் சாயுஜ்ய பதவி அடைகிருன்.

புலன் கதவுகளே நன்ருக அடைத்து, மனதை அசையாது நிறுத்தி, பிராணனே ஒன்றுகூட்டி, புருவமத்தியில் ஏற்றி, திவ்ய ஓங்காரத்தை ஜபித்துக் கொண்டு உடலேவிட்டு செல்லுவோன் பரமபதம் அடைவது உறுதி.

பிரஹ்மாண்டத்திற்குட்பட்ட பிரஹ்மலோகம் முதல் எல்லா உலகத்தவற்கும் மறுபிறப்புண்டு. ஆத்மஞானிகள் நித்யனுன பரமபுருஷனே அடைந்த பிறகு அவர்கட்கு மறு பிறப்பு இல்லவே இல்லே.

பிரம்மாவிற்கு ஆயிரம் யுகங்கள் ஒரு பகல். ஆயிரம் யுகங்கள் ஓர் இரவு. பூத சமுதாயங்கள் எனப்படும் உயிர்க்கூட்டங்கள்பிரகிருதி வசப்பட்டு, பகல் வந்ததும் உற்பத்தியாகி, இரவு வந்ததும் ஒடுங்கிவிடுகின்றன. ஆனல், நீள்காலத்தையும் கடந்து என்றுமுள்ள, அழிவற்ற அக்ஷர நிலேதான் சச்சிதானந்த பரப்ரஹ்ம நிலே, என்பதைத் தெளிந்து அறிவாயாக.

ஒன்பதாம் அத்யாயம்

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்

இங்கு வித்தைகளுள் ராஜ வித்தையானதும், ரகசியங்களுள் மேலானதும் சுலபமானதுமான பக்தி யோகத்தின் மேன்மையும், பலனும் கூறப் படுகின்றன. வைஷ்ணவத்தின் உயிர்நாடியான பிரபத்தி எனும் சரணுகதி பக்தி, இந்த அத்யாயம் முழுதும் ஊடுருவி நிற்பதைக் காணலாம். பகவானை சுலபமாக அடையும் ராஜபாட்டை இது.

பக்தி யோகத்தில் இறங்குவோன் முதலில் அதில் முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். கடவுளின் பெருமைகளை விரிவாகவும், ஆழ்ந்தும் உணர வேண்டும்.

பகவான் இவைகளை அர்ஜுனனுக்கு எடுத்துரைக்கிருர் :-

அர்ஜுனு! நானே எங்கும் நிறைந்த பரம் பொருள். உலக மனைத்தும் என்னிடத்தில் நிலை பெற்று நிற்கிறது. ஆனுல், நான் எதிலும் நிலை பெற்று நிற்பதில்லை. காற்று மண்டலம் எப்படி ஆகாயத்தில் நிலைத்துள்ளதோ, அது போல் எல்லா பூதங்களும் உயிர்களும் என்னிடத்தில் நிலைத்துள்ளன.

கல்ப முடிவில் உயிர்கள் அனைத்தும் என் பிரக்ருதியில் லயமாகின்றன. கல்பத்தின் தொடக்கத்தில் மீண்டும் அவைகளைச் சிருஷ்டிக்கிறேன். எனது தலைமையில், பிரக்ருதிசக்தி, அண்ட சராசரங்களையும் உண்டாக்குகிருள்; ஒடுக்குகிருள்.

எனவே எல்லா உயிர்களுக்கும் மஹேஸ்வரன் நானே.

நானே வேள்வி; வேள்விக்குத் தலைவனும் போக்தாவும் நானே. நானே இவ்வுலகின் அன்னை, அப்பன், பாட்டன். அனைத்து ஜீவர்க்கும் நானே தோழன், நாயகன். நானே இறைவன், சாட்சி, இருப்பிடம். நானே, சூரியன் வடிவாக வெப்பந் தருகிறேன், மழையைப் பொழிகிறேன், உலகை வறட்டுகிறேன்.

யோக மாயையால் மனித உருவங்கொண்டிருக்கும் என்னை மூடர்கள் வீணறிவு கொண்டு, அசுர இயல்பைப் பூண்டு புறக்கணிக்கின்றனர்.

விராடஸ்வரூபனான என்னை சிலர், ஒன்றாய், பலவாய், பலவாறாக வழிபடுகின்றனர். சிலர் வேதசாஸ்திரப்படி வேள்விகளால் வழிபட்டு ஸ்வர்கப் பிராப்தியை வேண்டுகின்றனர். தங்கள் புண்யத்தின் பயனாக ஸ்வர்கத்தில் தேவ போகங்களை அனுபவித்து, புண்யம் தீர்ந்ததும் மீண்டும் இந்த அநித்ய உலகில் பிறக்கின்றனர்.

அநன்னியமாக (அன்னியமில்லாது) என்னையே சிந்தித்து உபாஸிக்கும் நித்ய யோகிகளின் யோக க்ஷேமங்களை நானே கவனித்துக் கொள்கிறேன்.

மேலும், இலையோ, பூவோ, பழமோ, நீரோ, எதையும் உள்ளன்புடன் அளிக்கும் காணிக்கையை நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன். எதைச் செய்தாலும், உண்டாலும், கொடுத்தாலும், அதையெல்லாம் எனக்கே அர்ப்பணம் செய்துவிடு.

இதனால் நன்மை தீமைகளைத் தரும் வினைத் தளையினின்று நீ விடுபடலாம்; முக்தனாகி என்னை அடையலாம்.

எனக்கு உலகினர் அனைவரும் சமம். பகைவன்-பிரியன் என்பது எனக்கு இல்லை. அன்புடன் நேசிப்பவர் எவருள்ளும் நான் இருப்பேன். மாதர், வைசியர், சூத்திரர், முதலானோரும் என்னைச் சரண்புகுந்தால், பரமகதி அடைவரெனில், புண்ய சீலரும், ராஜரிஷிகளும், பரமகதியடைவதைச் சொல்லவும் வேண்டுமோ!

எனவே அர்ஜுனா! எனது சிந்தனையில் நிலைத்திரு! என் அன்பனாயிரு. சர்வ வியாபியும், சக்திமானுமான என்னையே பணிந்து வழிபடு, சரணடை, என்று உபதேசித்தார்.

பத்தாம் அத்யாயம்

விபூதி யோகம்

விபூதி என்றால், அபூர்வ மகிமை என்று பொருள். மேன்மை நிறைந்த உயிர்கள், பொருட்கள், எல்லாவற்றிலும் பகவான் விசேஷமாக இருப்பதை நீள்பட்டியல் மூலம் இதில் விளக்கப் படுகிறது.

ஆதியில் பிருகு முதலிய சப்த ரிஷிகளும், நான்கு மனுக்களும் பகவானின் பிரபாவத்தோடு உதித்தார்கள். உலகத்து உயிர்கள் யாவும், பின் அவர்களால் சிருஷ்டிக்கப்பட்டவையே.

உயிர்களுக்கு அவரவர் கர்மவினைகளுக்கேற்ப, புத்தி, ஞானம், மயக்கமின்மை, அஹிம்ஸை, சத்தியம், அடக்கம், அமைதி, இன்ப-துன்பம், பிறப்பு-இறப்பு, நடுநிலை, திருப்தி, தபஸ், தானம், புகழ்ச்சி-இகழ்ச்சி ஆகிய பலவித பலன்கள் கூடி

வரும்படி பகவானே செய்தாலும், அதில் எள்ளத் தனையும் சாராது நிற்கும் மேன்மையே பகவானின் விபூதியாகும்.

நடைமுறையில் ஒருவன் பகவானை என் னென்ன பாங்குகளில் சிந்தித்து பக்திசெய்யலாம்? என்று அர்ஜுனன் வினவ, பகவான் விவரிக்கிறார்:-

விஜயனே! வேதங்களுள் சாம வேதம் நான். தேவரில் இந்திரன், இந்திரியங்களில் மனம், ஸ்தா வரங்களுள் ஹிமயம், புரோகிதர்களுள் பிரஹஸ் பதி, சேனைத்தலைவருள் முருகன், நதிகளில் கங்கை, நீர்நிலைகளுள் கடல், எழுத்துக்களில் அகரம், சப்தங் களுள் பிரணவம், விலங்குகளில் சிங்கம், பக்ஷிகளுள் கருடன், மரங்களுள் அரசமரம், மாதங்களில் மார்கழி, பருவங்களில் வஸந்தம் நான். இவை சில பிரத்யக்ஷ உதாரணங்களே.

மாண்பும், அழகும், வலிவும் உடையது எவை யெவையோ, அவையெல்லாம், என் தேஜஸின் அம்சம் என்று உணர்க.

சித்தத்தை என்னிடம் வைத்து, உயிரை என்பால் அர்ப்பணித்து, என் பெருமையைப் புகழி சைத்து மகிழ்வாயாக.

பதினொன்றும் அத்யாயம்

விச்வரூப தர்சன யோகம்

இங்ஙனம், கண்ணனுடைய பெருமைகளைக் கேட்ட அர்ஜுனன் அவற்றை நேரில் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பமுற்று, கண்ணனை வேண்டு கிறான். பகவான், அர்ஜுனனுக்கு அவற்றைக்

காண்பதற்குரிய திவ்ய திருஷ்டியை அளித்து அவன் காண விரும்பிய விஸ்வரூப தரிசனத்தைக் காட்டினார்.

அருள்விழிகளால் அர்ஜுனன் கண்ணனுடைய பிரம்மாண்டமான விஸ்வரூபத்தையும் யோக சக்தியையும் கண்டான். வானில் ஆயிரம் சூரியர்கள் ஒருங்கே உதித்தொளிர்ந்ததுபோல தேஜோமயனாய் விஸ்வமூர்த்தி பிரகாசித்தார். அனேக வாய்களும், பல கண்களும், கைகளும், கால்களும், பல ஆயுதங்களும், சிறந்த ஆடை ஆபரணங்களும் திவ்யமாலைகளும், மகுடமும், தண்டும், வலயமும் தாங்கித் திகழ்ந்த விஸ்வரூபத்தைக் கண்டான்.

பிரம்மா, ஈஸ்வரன், ரிஷிகள், சித்தர், சுரகணர், யக்ஷர், கந்தர்வர் அனைவரையும் பகவானிடத்தே கண்டான். நாற்றிசைகளிலும் கொடும் சுடர்பரப்பி, கோரப்பற்களுடன், ஊழித்தீபோல் காந்தும் அவன் வாயில் கௌரவர்களும், பீஷ்ம-துரோண-கர்ணாதி வீரர்களும் விரைவாய் சென்று வீழ்வதைக் கண்டான். விண்ணளாவி, திசைகளெல்லாம் நிறைந்து பல ஒளிப்பொலிவுடன் ஈரேழு லோகங்களையும் அங்கு கண்டான்.

பகவானின் பிரம்மாண்டமான விசுவரூபத்தைக் கண்ட அர்ஜுனன் வியப்புற்று, மெய் விதிர்த்து, அந்த பயங்கரமான சொரூபத்தை விடுத்து, மனோ ரம்யமான பழைய வடிவத்தையே காண்பிக்குமாறு வேண்டினான். அஞ்சிப்பணிந்து, கை குவித்து வணங்கி உரைப்பான்:—

ஹ்ருஷீகேசா, புராண புருஷா, அனந்த வடிவே! வணக்கம் வணக்கம். உன்மாண்பினை அறியாமல் மனிதத்தோழனென்று உன்னைமதித்து, அன்பினாலும் அசட்டையினாலும, கிருஷ்ண

நண்பா, என்று விநயமின்றி அழைத்து வந்தேன் வேடிக்கையும் பேசினேன். என்னை மன்னித் தருள்வாய்.

சராசரங்களான இவ்வுலகின் தந்தை நீ. உலகெல்லாம் வணங்கத்தக்க பரமகுரு நீ. தந்தை தனயனின் பிழையைப் பொறுப்பது போல், சிறியேனைப் பொறுத்தருள்வாய்.

இவ்வாறு துதித்த அர்ஜுனனுக்கு சாந்த மூர்த்தியான பகவான் அருளினார்:-

அர்ஜுனா! உயர்தவத்தோய்! காண்பதற்கரிய என்வடிவினைக் காண தேவரும் காண விரும்பி நிற்கின்றனர். வேதம், தவம், கொடை, வேள்வி யாலும், யாரும், நீ கண்டதுபோல் என்னைக் காண முடியாது. அனன்ய பக்தியால் தான், இவ்விதம் என்னை அறியவும், காணவும் இயலும். பெறற்கரிய அந்த பாக்யம் பெற்ற நீயே தன்யவான்.

விஜயா! தீயோரை அழிக்கப்புகுந்த காலன் நான். பீஷ்மர் துரோணர் ஜயத்ரதன் முதலிய இங்குள்ள எதிரிகள் அனைவரும், என் சங்கல் பத்தால் ஏற்கெனவே மாய்ந்தவர்கள். நீ, வெறும், நிமித்தமாக நின்று வெளிக்குறியாக அவர்களை வெல்லப் போகிறாய்! எனவே, அர்ஜுனா! எழுந்து நில்! வீறுகொள்! பகைவரை வென்று வளமான ராஜ்யத்தைப் பெறுவாயாக.

பன்னிரண்டாம் அத்யாயம்

பக்தியோகம்

ஞானயோக பக்தி யோகங்களுள் ஞான யோகம் தாமதித்தே பலனளிக்குமென்றும், அதில்

மனதை நிறுத்துவது கஷ்டமானதென்றும், ஆனால் பக்தியோகமோ விரைந்து பலனையளிக்குமென்றும், சுலபமானதென்றும் இவ்வத்யாயத்தில் கூறப்படுகிறது. பக்தி யோகத்தைப் பயிலுவதற்குரிய உபாயங்களும் கூறப்படுகின்றன.

எத்தகையவன் பகவானுக்கு உகந்த பக்தனாகிறான் என்ற வினா-விடையே, பக்தியோகத்தின் முக்கிய சாரமாகும். ஸ, மே ப்ரிய: அதாவது அவன் எனக்கு பிரியமானவன் என்று சொல்லிவிட்டு, பிரிய பக்தனுக்கு இருக்கவேண்டிய உயர் குணங்களை நீண்ட பட்டியல் போட்டு பகவான் அருள்கிறார். கூர்ந்து படித்தால் அமுது போல் இனிக்கும்.

இனி, பகவானை, சகுணமூர்த்தியாக நன்கு வழிபடும் பக்தர், அல்லது அக்ஷர, நிர்குண பிரம்மமாக உபாஸிப்போர், இவ்விரு திறத்தாரில் உத்தம யோக ஞானிகள் யாவர்? என விஜயன் கேட்க, நந்தநந்தன் நவில்கிறார்:-

தனஞ்ஜயா! என்னிடம் மனதைநாட்டி, பரம சிரத்தையுடன் என்னை வழிபடுவோர் சிறந்த யோக யுக்தர்கள் என நான் மதிக்கிறேன்.

ஐம்புலன்களையும் அடக்கி, குணங்குறியற்ற, கூடஸ்த நிராகார பிரஹ்மத்தை உபாசனை செய்வோரும் பரமபதம் பெற்று என்னையே அடைவர்.

எனினும், நாம ரூபமற்ற 'அவ்யக்த' பிரஹ்மத்தில் ஈடுபடுவது மிக சிரமம். தேகாபிமானிகட்கு இவ்வழி மிகக் கடினம்.

பார்த்தா! என்னையே பரமாகக்கருதி, செயல்களை எல்லாம் எனக்கே அர்ப்பணித்து, தைலதாரை போன்று என்னையே இடையறாது தியான

கோவிலூர் ஆதீ...
A-NO: 1477
R65, h

உபாஸனை செய்பவனை, ஸம்ஸாரக்கடலினின்று நான் கரையேற்றுகிறேன்.

இந்நிலைபெற அப்யாஸம் செய், அப்யாஸத்தில் வல்லமை இல்லை எனில் என்பொருட்டே கர்மம் செய்வதைக் குறியாகக்கொள். என்னிடம் அடைக்கலம் புகுந்து, கர்ம பலன் முழுவதையும் எனக்கு அர்ப்பணம் செய். தொண்டு தியாகத்தினால் விரைவில் சாந்தி ஏற்படும்.

பகவான் தனக்கு பிரியமான பக்தனின் லக்ஷணங்களை விவரித்து கூறுகிறார்:-

எவ்வுயிரிடத்தும் வெறுப்புக்கொள்ளாது, நட்பும் கருணையும் பேணி, யான் எனது எனும் செருக்கற்று, சுக-துக்கங்களைச் சமமாகக் கொண்டு, யாண்டும் மனநிறைவும், தன்னடக்கமும் கொண்டு, உறுதியுடன் மனதையும் புத்தியையும் எனக்கே ஈந்த பக்தன் எவனோ அவன் எனக்கினியன்.

எவனால் உலகோர் வருந்துவதில்லையோ, எவன் உலகால் அஞ்சுவதில்லையோ, எவன் களிப்பு, கலக்கம், அச்சத்தால் விளையும் ஆத்திரம் இவற்றினின்று விடுபட்டவனோ, அவனே எனக்கினியவன்.

எதையும் ஆசையோடு எதிர்பாராதவன், உட்புறத் தூயன், காரியத்தில் திறலோன், எதிலும் சார்பற்ற உதாஸீனன், கவலையற்றவன், நான் எனும் அகந்தையுடன் வினைகளைத் தொடங்காதவன் எவனோ, அவன் எனக்கு பிரியமானவன்.

பகைவர்-நண்பர், இசை-வசை, தண்மை-வெம்மை, இன்பம்-துன்பம், இவையனைத்தையும் ஒன்றாய் கருதும் மௌன சீலனாய், உடமைகளில் பற்றில்லாது, எது எப்படி எய்தினும் யாண்டும்

உட்களிப்புடன் நிலேத்த புத்தியுள்ள பக்திமான் எவனே அவன் எனக்கினியவன்.

பதின்மூன்ரும் அத்யாயம்

க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ விபாகயோகம்

ஜீவன், கர்மபல போகங்களை அனுபவிப்பதற்குரிய இடமான, சரீரம்தான் 'க்ஷேத்ரம்' எனப் படும். உள்ளிருந்து எல்லாம் அறிபவனே 'க்ஷேத்ரக்ஞன்' என்று தத்வ ஞானிகள் கூறுகின்றனர்.

பிரகிருதி எனும் இயற்கை, புருஷன் எனும் ஆன்மா, க்ஷேத்ரம் எனும் நிலம், க்ஷேத்ரக்ஞன் எனும் நிலத்தில் நின்றறிபவன், ஞானம் எனும் அறிவு, ஞேயம் எனும் அறியப்படும் பொருள் இவைகளைத் தெளிவாக அறிய விரும்பிய பார்தனுக்குப் பரந்தாமன் விரித்துப் பகர்ந்தருளினர் :-

குந்தி புத்ரா! க்ஷேத்ரங்களனைத்திலும் நானே க்ஷேத்ரக்ஞன் என்றறிவாய். க்ஷேத்ரம் எது, க்ஷேத்ரக்ஞன் யார் என்று விபாகம் செய்து, பகுத்து அறிவதே சிறந்த அறிவாகும்.

இதை பல்வேறு வேத மந்த்ரங்களிலும் யுக்திக்கு பொருத்தமாக ப்ரஹ்ம சூத்ர பதங்களிலும் ரிஷிகளால் இனிமையாக சொல்லப் பட்டுள்ளது.

ஆகாசம் முதலிய பூதங்கள் ஐந்து, அகங்காரம் முதலிய குணமாயை மூன்று, கர்ம-ஞான இந்திரி

யங்கள் பதினொன்று, பஞ்சேந்திரியங்களின் தன் மாத்ரைகள் ஐந்து, ஆக 24 தத்வங்கள் தான் சரீர வடிவான க்ஷேத்ரமாகும்

ஆத்மாவிற்கு, இத்தேகத்தின் சேர்க்கையால் தான் விருப்பு-வெறுப்பு, இன்ப துன்பம், உடல் உணர்வு, முதலியவை உண்டாகின்றன. இவைகள் விகாரம் எனப்படும்.

ஞானமாவதென்ன?

டம்பமின்மை, தற்புகழ்ச்சியின்மை, அஹிம்சை, பொறுமை, நேர்மை, குருசேவை, உள்ளத் தூய்மை, உறுதி, தன்னடக்கம்.

புலன் பொறிகளில் சிக்காத வைராக்யம், பிறப்பு-இறப்பு-மூப்பு, நோய், துயர் முதலியவற்றைச் சிந்தித்துத் தெளிந்த சீரிய நோக்கு.

மனைவி, மக்கள், செல்வம் முதலியவற்றிடம் எனதென்னும் அபிமானமின்மை, விரும்பியது-விரும்பாதது ஏதெய்தினும் சமசித்தம்.

வீண்வாதங்கள், விஷய ஆசக்திகள் ஜனக் கும்பல் முதலியவற்றை ஒதுக்கி, தூய தனியிடத்தில் வசித்தல், அத்யாத்ம ஞானத்தில் நிலைத்திருத்தல், எல்லாம் அவனே எனும் தத்வஞானக் காட்சியைக் காணுதல் இவைகள் ஞானமாகும்.

இவற்றிற்கு மாறானவை அனைத்தும் அக்ஞானம் எனப்படும்.

ஞேயமாவது என்ன?

எதை அறிந்தால் அம்ருத நிலை எய்துமோ, அந்த அறிதற்குரிய ஆதியந்தமற்ற பரப்ரஹ்மமே ஞேயமாகும்.

எங்கும் கை-கால்-தலைகள் விரித்து, உலகெலாம் அளாவி நிற்கிறது எதுவோ, சர்வேந்திரிய குணங்களோடொளிர்ந்தாலும், அவற்றின் புறம்பாக நிற்பது எதுவோ, தனது சக்தி, ஆடலால் அனைத்தையும் தாங்கி நடாத்தினுலும் எதிலும் பற்றற்றது எதுவோ, பஞ்ச பூதங்களுக்கு உள்ளும் புறமுமாவது எதுவோ? அதிநுட்பமானதால் அறிவிற் கெட்டாதது, எதுவோ,

மஹாகாசம் போல பகுப்பற்று ஏகமாய் நின்ருலும், கடாகாசம் போல சராசர வஸ்துக்களில் தனித் தனிபோல இருப்பது எதுவோ, அனைத்தையும் உண்டாக்குவதும் விழுங்குவதும் எதுவோ,

ஒளிக்கெல்லாம் ஒளியாய், ஞானிகளுக்கு அருகிலும் மூடர்களுக்கு தூரத்திலும் இருக்கும் அந்தப் பரப்ரஹ்மமே ஞேயமெனும் அறியத்தக்க பெரும் பொருளாகும்.

பதிநான்காம் அத்யாயம்

குணத்ரய விபாக யோகம்

சத்வம், ரஜஸ், தமஸ் (ஒண்மை, வேட்கை, மயக்கம்) எனும் முக்குணங்களின் பிறப்பையும், அவைகளின் லக்ஷணங்களையும் இவ்வத்யாயத்தில் பகவான் விளக்குகிருர்.

தேக சம்பந்தத்தால் தான், சுகதுக்கங்கள், கோபதாபங்கள் போன்ற குணங்கள் ஆத்மாவை பற்றுகின்றன என்று முன்கூறிய கோட்பாடு, இங்கு விவரிக்கப்படுகிறது.

பாரதனே!

மஹத்ப்ரஹ்மம் எனும் முக்குணமாயை என் கருநிலம். பிரக்ருதி எனும் அதுவே எல்லா உயிர்களுக்கும் தாய். அதன் கருவில் எனது சேதன விதையை இடும் தந்தை நான். அதனின்றே, அனைத்துயிர்களும் உண்டாயின. பிரக்ருதியினின்று உண்டான முக்குணங்களே அழிவற்ற ஆத்மாவை உடலோடு பிணைக்கின்றன.

அவற்றில், சத்வம், மனிதனுக்கு ஞான ஒளியையும் நன்மார்க்க விருப்பத்தையும் அளிக்கிறது. ஆசையின் வடிவமான ரஜஸ், வேட்கைப்பற்றுதலால் கர்மங்களில் தூண்டுகிறது. தமஸ் அறியாமையின் கோட்டையாகும். அசட்டை, சோம்பல், உறக்கம் இவைகளால் தேஹியை (ஜீவாத்மாவை) கட்டுப்படுத்துகிறது.

அர்ஜுனே!

அவரவர் பண்புப்பதிவுகளுக்கேற்ப, (சம்ஸ்காரங்களுக்கேற்ப) மூன்று குணங்களுள் ஒன்று மற்ற இரண்டையும் அடக்கி மேலெழுகின்றது. ஸத்வ குணம் ஓங்கும் பொழுது, பொறிவாயில்களில் ஞான ஒளி வீசுகிறது. ரஜோ குணம் முன்னிடும் பொழுது ஆசை, வினைவிருப்பம், அமைதியின்மை மேலெழும். தமோ குணத் தலையெடுப்பால், மதிமயக்கம், மந்தம், அசட்டை இவைகள் விளைகின்றன.

ஸத்வகுணத்துடன் உயிர் நீத்தால், நல்லறிவாளரிடம் பிறப்பர். ரஜோகுணத்துடன் காலமாகிறவர் கர்மப்பற்றுடையவர்களிடத்தேயும், தமஸ்ஸுடன் சாகின்றவர் அறிவிலிகளின் கர்ப்பத்திலும் பிறப்பர்.

பிறப்பை உண்டாக்கும் இம்முக்குணங்களைத் தாண்டி, பிறப்பு, இறப்பு, மூப்பு எனும் துன்பத்தினின்று விடுபட்ட முக்த ஜீவன் மரணமிலாப் பெருவாழ்வு பெறுகிறான்.

இம்முக்குணங்களைத் தாண்டியவனின் அடையாளங்களென்ன? அவன் ஒழுக்க முறையென்ன? என்று பார்த்தன் கேட்க, பகவான் அருள்கிறார்:-

பரத காளையே! ஆத்மாவில் நிலைத்த நிறை ஞானி, குணங்களால் அசைக்கப்படாமல், வெறும் சாக்ஷியாக இருந்துகொண்டு, குணங்களே தொழில் புரிகின்றன என்று கண்டு ஸ்திரமாயிருப்பான்.

துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கொண்டவன், மண்ணையும் பொன்னையும் நிகராகக் காண்பவன், மான-அவமானங்களை ஒன்றாக ஓர்பவன், நண்பர்-பகைவரிடத்து ஒரே பாங்குடையவன், தன் ஆத்மாவில் நிலைத்திருக்கும் தீரன் எவனோ, அவன் தான் குணங்களைக் கடந்த குணாதீதனாகி ப்ரஹ்ம நிலைக்குத் தக்கவனாகின்றான்.

—❁—

பதினைந்தாம் அத்யாயம்

புருஷோத்தம யோகம்

பிரக்ருதி முதல் தன்மாத்திரைகள் ஈறாக இருபத்திநான்கு தத்வங்களை தன் சரீரமாகக் கொண்டவர் பரமாத்மாவே, எனினும் அவற்றினின்று வேறுபட்டும், அவற்றுள்ளே அந்தர்யாமியாக நின்றும், அனைத்திற்கும் ஈஸ்வரனாக விளங்குகிறார். வடிவெடுத்த க்ஷர புருஷனாகவும், கூடஸ்தனாகவும், மூவுலகைத் தாங்கியும், அனைவற்றிற்கும்

அத்தனுக உயர்ந்தும் விளங்குதலால், வேதங்களால் அவர் புருஷோத்தமன் எனச் சிறப்புப் பெற்றுள்ளார்.

பிரபஞ்சத்தை மேலும் விளக்கி அர்ஜுனனுக்கு பகவான் சொல்வார்:-

மேலே வேருள்ளதும், கீழே கிளை-இலைகளைக் கொண்டதுமான, அரசமரம் போல மாயப் பிரபஞ்சமானது, மேலே பரம் பொருளாகிய என்னிடமிருந்து சத்தைப் பெற்று, கீழே பிரக்ருதியாகப் பரிணமிக்கிறது. வினைப்பற்றை வேராகக் கொண்டு, முக்குண நீருண்டு தழைத்து, விஷயசுகங்களால் செழித்து, கீழும் மேலும் பல்வகை ஜீவராசிகளாகி, கிளை பரவிக்கிடக்கிறது.

அர்ஜுனு! முடிவும், துவக்கமும், இருப்பும் இல்லாத இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையெனும் மரத்தை, பற்றின்மையெனும் உறுதியான கோடாரியால் வெட்டி, என் பரமபதத்தைத் தேடுவாயாக.

எங்கு சென்றவர், திரும்புவதில்லையோ, எங்கு சூரியனும், சந்திரனும், அக்னியும் பிரகாசிக்க மாட்டாவோ, அதுதான் என் பரமபதம்.

இந்த ஜீவலோகத்தில், என் ஸநாதன அம்சமே, ஜீவாத்மாவாகி புலன்கள், மனம் ஆகிய ஆறு இந்திரியங்களையும் போகத்தில் ஆழ்த்துகின்றது.

மலர், சந்தனம், போன்ற மணப்பொருட்களிலிருந்து, காற்று, மணத்தை மட்டும் பற்றிச் செல்வதுபோல, ஜீவாத்மா, தான் களையும் உடலிலிருந்து, மனம் முதலிய ஆறு பொறிகளையும் பற்றிக் கொண்டு புது உடலுட்புகுகின்றது. என்

அம்சமான ஜீவாத்மாவே, ஆறு பொறிகளுள்ளும் நிலைகொண்டு விஷயங்களை அனுபவிக்கிறது.

பூமியிற் புகுந்து நானே என் வல்லமையால் உயிர்களைத் தாங்குவதுடன், உயிர்களின் உணவின் பொருட்டு, சூரிய சந்திரனாகிப் பயிர்களை எல்லாம் வளர்க்கிறேன். உயிர்களின் உடலில், நானே, வைஸ்வாநரன் எனும் உதரக்கனலாகி, பிராண அபான வாயுக்களுடன் கூடி, நால்வகை உணவு களையும் ஜீர்ணிக்கிறேன். எல்லா உள்ளத்தும் கோவில் கொண்டு, அழிவிலாக் கூடஸ்தனாக விளங்குகிறேன்.

பாரதா! எந்த ஞானி என்னை இவ்வாறான புருஷோத்தமனென்று அறிகின்றானோ, அவனே அனைத்தையும் அறிந்தவனாகிறான். இந்த ரகசிய மான யோக சாஸ்திரத்தை அறிந்த புத்திமான், செய்யத்தக்கவற்றைச் செய்து முடித்த க்ருதக்ருத் யன் ஆகின்றான்.

பதினாறும் அத்யாயம்

தேவாசுர ஸம்பத் விபாக யோகம்

தர்மத்தைச் சார்ந்து நிற்கும் தெய்வ சம்பத்து மோக்ஷம் தரவல்லது என்றும், தர்மத்தை மீறும் அசுர சம்பத்து சம்சார பந்தத்தில் ஆழ்த்தி, நரகில் வீழ்த்துமென்றும் பகவான் கூறி, அந்த இரு சம்பத்துகளின் குணங்களை இங்கு விவரிக்கிறார்:-

கௌந்தேயா !

அஞ்சாமை, உள்ளத்தூய்மை, ஆத்ம ஞானத் தில் உறுதி, ஈகை, புலனடக்கம், புருஷோத்

தமனுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் வேள்வி, தெய்வீக நூற்பயிற்சி, தபஸ், நடத்தையில் நேர்மை இவைகள் தெய்வ சம்பத்துக்களாகும்.

மேலும், பிறர்க்குத் தீங்கிழையாத அஹிம்சை, உண்மை, துறவு எனும் தியாகம், சினமின்மை, கோள் சொல்லாமை, உயிர்களிடத்து இரக்கம், உள் அமைதி, தூய்மை,

பிறர் பொருளை விரும்பாமை, தகாதது செய்வதில் நாணம், சபலமின்மை, தைரியம், பொறுமை, மனவுறுதி, வஞ்சகமின்மை, செருக்கின்மை, இவைகள் தெய்வத்தன்மையின் வளமையாகும்.

இவைகட்கு மாறாக, பகட்டு, இறுமாப்பு, தற்பெருமை சினம், கடுமை, நான் வல்லவனென்னும் அக்ஞானம் இவை அசுர சம்பத்தின் இயல்புகளாம்.

அசுரகுணத்தோர், 'உலகம் தெய்வப்படைப்பு அல்ல' என்பர். ஆண் பெண் சேர்க்கையால் பிரபஞ்சம் உண்டானது என்றும், போகங்களையே காரணமாயுடையது என்றும் நினைப்பர். இந்தப் பொய் நோக்கத்தில் நிலைபெற்று, உலகத்திற்குக் கேடு சூழும் கொடுந்தொழில் புரிவர்.

ஆசை, அகந்தையால் வாழ்வைப் பாழாக்கி, இறக்கும்வரை எண்ணற்ற பொய் நினைப்புகள் பூண்டு, பாழும் போகங்களை இன்பம் என்று புன்மதி கொண்டு திரிவர். நான் பணக்காரன், மக்கட்பேறுடையோன், பலவான், எனகர்வம் கொண்டு, மடமையில் மகிழ்வர்.

இவர்கள் நூற்றுக்கணக்கான ஆசைக்கயிறுகளால் கட்டப்பட்டவர்களாய், காம, க்ரோத

வசப்பட்டு, பிறரைத் தூற்றி, போகத்தின் பொருட்டு, வெறிபிடித்துப் பொருள் சேர்ப்பர். பின், செல்வச் செருக்குடன் முரடர்களாகி, வீண் புகழ்ச்சிக்காகவும், டம்பத்திற்காகவும் முறை தவறி வேள்விகள் செய்வர். இக்கொடியவர், ஜன்ம ஜன்மமாய் அசுரப்பிறப்படைந்து, மனித விலங்காக வாழ்ந்து, அதோகதி அடைகின்றனர்.

ஈருக, செய்யத்தகுந்ததையும், தகாததையும் நிச்சயிப்பதில் ஒருவனுக்கு சாஸ்திரமே பிரமாணம் ஆகிறது. எனவே, சாஸ்திரம் விதிக்கும் செயல் களேயே ஒருவன் செய்யக் கடமைப்பட்டுள்ளான்.

அர்ஜுனு! காமம், க்ரோதம், லோபம் எனும் மூன்று நரக வாயில்களினின்று விடுபட்டு, உயர் நிலையை அடைவாயாக.

பதினேழாம் அத்யாயம்

சிரத்தாத்ரய விபாக யோகம்

மனிதர்க்கு, அவரவர் உள்ளக்கிடக்கைக் கேற்றவாறு, ஸாத்வீகம், ராஜஸம், தாமஸம் என மூன்று வகை சிரத்தை பிறக்கிறது. மனிதன் சிரத்தாமயன். எதனே அவன் நம்புகிருனே, அதுவேயாகி விடுகிருன்.

இவ்வத்யாயத்தில் பகவான் மூவகை சிரத்தா பக்தி, மூவகை உணவு, மூவித யாகம், மூவகை தவங்கள், மூன்று வகை தானம் இவைகளே வகைப் படுத்திக்கூறி, முடிவில், ஓம் தத் ஸத் மந்திரத்தின் அரும்பொருளே விளக்குகிருர்:-

ஹ்ருஷீகேசன் அருள்கிறார் :-

பால்குனா! மனிதனின் பண்புப்பதிவுகளின்படி, அவனிடம் சாத்வீகம், ராஜஸம், தாமஸம் ஆகிய மூவகை சிரத்தாபக்தி அமைகின்றன. சாத்திரங்களைத் தழுவி தேவர்களை வணங்குவோர் ஸத்வ பக்தி இயல்பினர். யக்ஷர், ராக்ஷஸர்களைத் தொழுபவர் ராஜஸர். தாமஸ ஜனங்களோ, பிரேத, பூதகணங்களைத் தொழுகின்றனர்.

சிலர், சாஸ்திரவிதிகளை மீறி, ஆசைவலுத் தவர்களாய், வீம்புடன் உடலையும் ஆத்மாவையும் வருத்தி, ஹிம்ஸைகளுடன் கூடிய கொடிய விரதங்களைச் செய்கின்றனர். அந்த அறிவிலிகள் அசுர வழியில் துணிந்தவர் என்று அறிக.

மூவகை உணவு

ஆரோக்யத்தை வளர்க்கும், ரசமுள்ள, பசையுள்ள (பால் பழம் போன்ற) ஆகாரம் ஸாத்வீக வலிவு தரும். கசப்பு, புளிப்பு, உப்பு, அதிக சூடு, குளிர், (மசாலை போன்ற) காரம், இவைகள் கொண்ட ராஜஸ உணவுகள் நோயும் துயரும் விளைவிப்பன. நாட்பட்ட, சுவைகெட்ட, எச்சிலான உணவுகளைத் தாமஸர் விரும்புவர். இவை பெரு நோய், மந்தபுத்தி தரவல்லன.

மூவித யாகம்

சாஸ்திர விதிப்படி பலனை விரும்பாது ஆராதனையாகச் செய்யும் யாகம் சாத்வீகமானது. பயனை விரும்பி ஆடம்பரமாகச் செய்யும் யாகம் ராஜஸமானது. நெறிவழுவி, தானம் - மந்திர மில்லாது விவேகமற்று செய்யும் யக்ஞம் தாமஸீகமாகும்.

மூவகை தவங்கள்

தேவர்கள், குண பிராமணர்கள், குரு, ஞானி ஆகியோரை போற்றுவதும், சுத்தம், நேர்மை, அஹிம்சை, புலனடக்கம் இவைகளை அனுஷ்டிப்பதும் தேகத்தால் செய்யும் தவமாகும். உண்மை, இனிமை, நன்மையுடன், கூடிய வார்த்தை பேசுதல், சாஸ்திரம் படித்தல் இவை வாக்கு தபஸாகும். அன்புடைமை, அமைதி, மௌனம், தன்னடக்கம், தூயநோக்கம் இவை மனதால் செய்யும் வேள்வியாகும். இந்த முத்தவங்களும் ஸாத்வீக தவமாகும்.

கௌரவத்திற்காகவும் பெருமைக்காகவும் செய்யப்படுவன ராஜஸ தபஸாகும். இது ஒரு நாள் சலிப்புற்றழியும். மடப்பிடிவாதத்துடனும், தன்னை வருத்தியும், பிறர்க்குக் கேடுறுத்தியும் செய்வது தாமஸ தவமாகும்.

மூன்று வகை தானம்

ஜிஷ்ணுவே ! இனி மூவித ஈகைகளையறிக. தக்க இடத்திலும் வேளையிலும், தக்க பாத்ரமானவர்க்குப் பிரதி உபகாரம் கருதாது தானம் செய்வது ஸாத்வீக தானமாகும். கைம்மாறு கருதி, மகிழ்ச்சியில்லாது, புகழுக்காக செய்யும் தானம் ராஜஸமானது.

மரியாதையின்றி, அலட்சியமாக தகாதார்க்கு தரப்படுவது தாமஸ ஈகையாகும்.

கிரீடி ! இனி ஓம் தத் ஸத் மந்திரத்தின் விளக்கம் அறிவாய். பரப்பிரம்மத்தை ஓம் தத் ஸத் என்ற முப்பெயர்கள் குறிக்கும். எனவே, யக்ஞ - தான - தவக்கிரியைகள் 'ஓம்' என உச்சரித்தே தொடங்க வேண்டும். மோக்ஷத்தை

விரும்பி செய்யப்படும் வேள்வியும் தவமும் தத் என்ற உச்சரிப்புடன் செய்யப்படுகின்றன. உத்தம மான மங்கள வினைகளில் ஸத் ஸப்தம் வழங்கப் படுகிறது. உள்ளது, உயர்ந்தது என்பது இதன் பொருள். 'தத்' எனும் பிரம்மத்திற்கு அர்ப்பண மாகச் செய்யப்படும் அனைத்து அறவேள்விகளும் ஸத் என்றே சொல்லப்படுகின்றன.

இந்த ஓம் தத் ஸத் மந்திரம் இகத்திலும் பரத்திலும் நலன் தருவதாகும்.

பதினெட்டாம் அத்யாயம்

மோக்ஷ ஸந்யாஸ யோகம்

இவ்வத்யாயம் கீதையின் நிறைவு அத்யாய மாகும். ஸந்யாஸம், தியாகம் இவற்றின் பாங்கு களை மேலும் அர்ஜுனன் விளக்கி கேட்க, பதி னேழாவது அத்யாயம் போல, இதிலும் மூவகை தியாகங்கள், மூவகை கர்மம், மூவகை ஞானம், புத்தி, சுகம் இவைகளின் முப்பண்புகளை, பகவான் எடுத்தியம்புகிறார். 'ஸர்வதர்மான்'-சர மஸ்லோகம் இவ்வத்யாயத்தில் வருகிறது.

தனஞ்ஜய! கர்மம் பந்தப்படுத்துவது; எனவே எல்லா கர்மங்களையும் விட்டுவிட வேண்டுமென்று சில அறிஞர்கள் கூறுவர். அது சரியன்று. பற்றை யும் பயனையும் விடுத்து, தர்ம கர்மங்களைச் செய்யவேண்டும் என்பதே என் உறுதியான கருத்து. வினை முதல்வன் இறைவன், செய்வது சக்தி என்றறிந்து, எல்லாச் செயல்களையும் ஈச்வரார்ப்பணமாக்கி விடுவதே தியாகத்தின் உண்மைப் பொருளாகும். வேள்வியும், தானமும்,

தவமும், புத்திமான்களைப் புனிதப்படுத்துவன. யாக்கை வாழ்வுள்ளவன் வினைகளை விடுவது அரிது. எனவே, செய்தற்குரிய முறையான செயல்களை, பற்றும் பயனும் விடுத்து செய்வது, ஸாத்வீகத் தியாகமாகும்.

இது துன்பம், இது உடல் வருத்தும், என்றஞ்சி ஒரு செயலை விடுவது ராஜஸத் தியாகமாகும்.

அறியாமையால் நற்செயல்களை விடுப்பது தாமஸமாகும்.

எல்லாக் காரிய நிறைவுகளுக்கும் சாங்கிய சித்தாந்தத்தில் ஐந்து காரணங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவை, அதிஷ்டானம் (உடல்) கர்த்தா (ஜீவன்) கரணங்கள் (பொறிபுலன்கள்) சேஷ்டா, (செயல் முயற்சி) தைவம் (அமானுஷ்ய சக்திகள்) எனப்படும்.

மனம், மொழி, மெய்களால் எவ்வினை செய் தாலும், மேற்சொன்ன ஐந்து காரணங்களே செயல்புரிகின்றன.

சுத்த பரமாத்மா, இயற்கையின் மூலம் அனைத்தும் செய்விக்கிறான் என்றறிந்து, வினையும் பய னும் என்னுடையவையல்ல என்று உறுதி பூண்ட வன், இவ்வுலகத்தையே கொன்றாலும் கொலை யாளியாகான், பாவம் அவனைப்பற்றாது.

ஸவ்யஸாசியே! ஞானம் (அறிவு) ஞேயம் (அறிபொருள்) ஞாதா (அறிவோன்) இம் மூன்றும் வினையெழுச்சி தருவன. கர்த்தா (செய் வோன்) கரணம் (கருவி) கர்மம், இம்மூன்றும் வினையமைப்பாகும்.

இனி, ஞானம், கர்மம், கர்த்தாவின் மூவித குணபேதங்களைக் கேளாய்!

ஞானம்

தனித்தனி நிற்கும் உயிரினங்களனைத்திலும், அழிவற்ற ஒரு முழுமுதற்பொருள் பேதமுமின்றி நிறைந்து நிற்பதைக் காணும் அறிவு ஸாத்விக அறிவாகும். உயிர்க்குலமனைத்தையும் பல தன்மைப் படுத்திக் காண்பது ராஜஸ அறிவாகும். ஓரக மாக ஒன்றையே பற்றி, காரணங்கருதாது, அதையே பிடித்து நிற்பது தாமஸ அறிவாகும். அது அற்பத்தனமானது.

கர்மம்

பலனில் பற்றின்றிச் செய்யப்படும் முறை யான செயல்கள் ஸாத்விகமாகும். பலனில் இச் சையுடன் மிக உழைப்பால் செய்யப்படும் செயல் ராஜஸமாகும். முன்பின் பாராமல், வினைத்திறன் நோக்காது, அறிவின்மையால் செய்யப்படுவது தாமஸச் செய்கையாகும்.

கர்த்தா

புகழ்விருப்பமின்றி, துணிவும் ஊக்கமும் கொண்டு, செயலாற்றி வெற்றி - தோல்வியால் விகாரமெய்தாதவன் சாத்விகச் செயலோன் ஆவான். புகழாசையுடன், வினைப்பயன் விரும்பி, உழைத்து, மகிழ்ச்சி - துயரில் கட்டுண்டவன் ராஜஸ கர்த்தா எனப்படுவான். அக்கறை-பயிற்சி இல்லாதும், மந்த புத்தியுடன் காலங்கடத்தியும், தவறான செயல்களைப் புரிபவன் தாமஸ கர்த்தா ஆவான்.

புத்தி

ப்ரவ்ருத்தி, (முயற்சி) நிவ்ருத்தி (ஒழிவு), செயற்குரியது - தகாதது, துணியத்தக்கது-அஞ்சத் தக்கது, பந்தப்படுத்துவது - விடுதலே தருவது, இன்னின்னதென்பதைத தெளிந்தறியும் புத்தி ஸாத்விக புத்தியாகும். வீர்யத்தால் அகந்தைக் குட்பட்டு, தர்ம - அதர்மத்தை உள்ளபடி பகுத் தறியாதது ராஜஸ புத்தியாகும். இருள்மூண்டு, அதர்மத்தை அறமெனத் தாறுமாருகக் காண்பது தாமஸபுத்தியாகும்.

சுகம்

மனிதனின் ஆன்மா தேடும்சுகம் மூவகைத்து. ஆன்மீக சாதனேகள், ஆரம்பத்தில் (மிகவருந்தி முயலவேண்டியிருப்பதால்) நஞ்சு போலும், முடிவில் அமுதம் போலும் பயன் தர வல்லது என்று தனது புத்தித் தெளிவால் காணும் இன்பம் ஸாத்விகம் எனப்படும். விஷயேந்திரியங்களின் சேர்க்கையால், முதலில் அமுதுபோல் தோன்றி, முடிவில் இன்னல் செய்வது ராஜஸ சுகமாகும். துயில், மந்தம், அசட்டையில் தோன்றி, முதலிலும் முடிவிலும் தன்னே மயக்கும் சுகம் தாமஸ மாகும்.

அகிலமனேத்தும், முக்குணமாயையின் விகார மானதால், மண்ணிலும் வானிலும் இம்முப்பண்பு களினின்று விடுபட்ட உயிரே இல்லே.

பரந்தபா! மனிதரில் நால்வகை இயற்கை சுவபாவங்கள் இருப்பதால், அந்தணர், வீரர், வணிகர், பணிஞர் என நால்வகைத் தொழில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

புலனடக்கம், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, சாஸ்திர அறிவு, ஈச்வர நம்பிக்கை

ஆகிய இயல்பினர் பிராமணர்கள். சூரத்தன்மை, துணிவு, உறுதி, சாதுர்யம், ஈகை, தலைமை தாங்குதல் இவ்வியல்புகள் க்ஷதரியத் தன்மையின் செயல்களாகும். உழவு, வாணிபம் இவை வைசிக கர்மங்கள். இட்டபணிகளைச் செய்யும் இயல்பினன் சூத்ரன் ஆவான்.

தனக்கியல்பான தொழிலில் மகிழ்வுடன் ஈடு பட்டவன், சுலபமாக கார்ய சித்தியும், ஆத்ம சித்தியும் பெறுகிறான். உலகெலாம் நிறைந்த பர மாத்மனைத் தனக்கியல்பான செயலால் வழிபட்டே பரமசித்தி பெறலாம். எனவே, பரதர்மத்தைவிட சுயதர்மமே மேலானது. கடமையாக அமைந்த கருமம் எதுவும் தீங்காகாது.

கௌந்தேயா! தம்தம் கர்மங்களைச் செய்து கொண்டு உள் துறவால் வினையற்ற சித்தி பெற்ற வன், பின் எப்படி பரமஞான நிஷ்டையும், பிரம் மத்தையும் அடைகிறான் என்பதை என்னால் அறிந்துகொள்.

மாசிலாத மதியுடையோனாய், தியான தாரணையால் தன்னை அடக்கி, சப்தாதி விஷயங் களை விடுத்து, விருப்பு-வெறுப்பை விட்டொழித்து, தனித்திருந்தும், உண்டி சுருக்கியும்,

மனம் - மொழி - மெய்யை வென்று, திட வை ராக்யம் பெற்றவனாகி, அஹங்கார மமகாரங்களை விட்டொழித்து செருக்கு - காமம் - கோபம் நீத்து, பிறர் பொருளை ஏற்காது அபரிக்ரஹம் பேணி, சாந்தமாயிருப்பவன் பிரம்மம் ஆவதற்குத் தகுந்த வனாவான்.

வலிய புஜத்தோய்! எல்லா உயிர்களின் உள்ளத்திலும் இறைவன் கோவில் கொண்டுள் ளான். தனது யோக மாயையால், ப்ரகிருதியந்

திரத்திலேற்றி, அனைத்தையும் ஆட்டிச் சுழற்று கிறான் என்றறிவாயாக.

ஆழ்ந்த ரகசியமான சரம ஸ்லோகத்தைக் கேள்.

எல்லாப் பிறதர்மங்களையும் விட்டொழித்து, என்னையே சரணடைக. எல்லா பாவங்களிலிருந்தும் உன்னை நான் விடுவிப்பேன், வருந்தாதே.

என்மனத்தனாய், என்பக்தனாய், எனக்கு வேள்வி செய். என்னையே அடைவாய். இது உண்மை.

பலச்ருதி

நந்த நந்தன் குந்தி நந்தனுக்கு நவின்றான்:-

நம் இருவருக்கும் நடந்த இந்த சம்பாஷணையைத் தினம் பாராயணம் செய்வோன் என்னை ஞானவேள்வியால் வழிபடுகிறான் என நான் மதிக்கிறேன். சிரத்தையுடன் இதைக் கேட்பவன் கூட மோக்ஷத்தை அடைவான்.

இவ்வாறு பகவானின் உபதேசச் சூளுரை கேட்டு, சந்தேகம், மயக்கம் ஒழித்த வீர விஜயன் சொல்கிறான்:-

அச்சுதா! உன் அருளால் என் மயக்கம் அழிந்தது. ஐயம் நீங்கினேன். இதோ எழுந்து விட்டேன். உன் ஆணையேற்று செயல் புரிவேன்.

இந்த அற்புதமான கிருஷ்ணார்ஜுன சம்வாதத்தை திவ்ய திருஷ்டியால் பார்த்துக் கேட்டு இன்பச் சிலிர்ப்புடன் திருதராஷ்ட்ரனுக்குச் சொன்ன சஞ்ஜயன், தன் கருத்தைக் கடைசி சுலோகம் ஒன்றில் வெளியிடுகிறான்.

யோகேஸ்வரனான கிருஷ்ணனும், வில்லேந்திய பார்த்தனும் எங்குளரோ. ஆங்கே திருவும், வெற்றியும், கீர்த்தியும், உறுதியான கொள்கையும் நிலவும். இஃது என் முடிவான கருத்து.

ஸ்ரீமத் பகவத் கீதா ஸாராம்ஸம் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

பகவத்கீதையின் முக்கிய சுலோகங்கள் ஏழு. ஒவ்வொருவரும் பாடம் செய்து பாராயணம் செய்வது மிக நல்லது. சகல ஸௌபாக்யங்களையும் அளிக்கவல்லது.

1 கர்மண்யேவாதி4காரஸ்தே
மா ப2லேஷு கதா3சந
மாகர்மப2ல ஹேதுர்பூ4: மா தே
ஸங்கோ3ऽஸ்த்வ கர்மணி [அத். 2. 47]

கடமையைச் செய்வதற்குத்தான் உனக்கு அதிகாரம் உண்டு ஒருபோதும் பயனில் அல்ல. பயனைக் கருதி கர்மம் செய்பவனாகாதே; கர்மங்கள் செய்யாமலும் இருக்க வேண்டாம்.

2 யதா3 யதா3ஹி த4ர்மஸ்ய
க்3லாநிர்ப4வதி பா4ரத
அப்4யுத்த2ாநமத4ர்மஸ்ய
தத3ாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் [அத். 4.7]

எவ்வெப்பொழுது தர்மத்திற்கு குறைவும் அதர்மத்திற்கு எழுச்சியும் உண்டாகிறதோ, அவ்வெப்பொழுது நான் என்னைப் படைத்துக் கொள்கிறேன்.

3 பரித்ராணாய ஸாதூ4நாம்
விநாசாய ச து3ஷ்க்ருதாம்
த4ர்ம ஸம்ஸ்தா2பநார்தா2ய
ஸம்ப4வாமி யுகே3 யுகே3 [அத். 4. 8.]

நல்லோரைக் காக்கவும் துஷ்டர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டுதற்கும் யுகந்தோறும் வந்துதிப்பேன்.

4 ப்^{3}ரஹ்மார்ப்பணம் ப்^{3}ரஹ்மஹவிர்
ப்^{3}ரஹ்மாக்^{3}நௌ ப்^{3}ரஹ்மணாஹுதம்
ப்^{3}ரஹ்மைவ தேந க^{3}ந்தவ்யம்
ப்^{3}ரஹ்ம கர்ம ஸமாதி^{4}நா [அத் 4. 24]

அர்ப்பணம் பிரம்மம், அர்ப்பிக்கப்படும் பொருளும் பிரம்மம், அக்கினியாகிய பிரம்மத்தில் பிரம்மத்தாலேயே ஹோமம் செய்யப்படுகிறது. பிரம்ம கர்மத்தில் சமாதி எய்தும் அவனால் சென்றடையப்படும் பொருளும் பிரம்மமே.

5 அநந்யாச் சிந்தயந்தோ மாம்
யே ஜநா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி^{4}யுக்தாநாம்
யோக^{3} க்ஷேமம் வஹாம்யஹம் [அத் 9. 22]

வேறொன்றிலும் நாட்டமில்லாது, என்னையே சிந்தித்து எவர் பரிவுடன் உபாஸிக்கிறார்களோ, அந்த நித்ய பக்தர்களின் அனைத்து க்ஷேம நலன்களையும் நானே வகிக்கிறேன்.

6 ஸர்வத^{4}ர்மாந் பரித்யஜ்ய
மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்^{4}யோ
மோக்ஷயிஷ்யாமி மா சுச: [அத். 18. 66]

எல்லா தர்மங்களையும் விட்டொழித்து என்னை ஒருவனையே சரணடைவாயாக. நான் உன்னை சகல பாபங்களினின்றும் விடுவிப்பேன். வருந்தாதே.

7 யத்ர யோகே3ச்வர: க்ருஷ்ணோ
யத்ர பார்தோ2 த4நுர்த4ர:
தத்ர ஸ்ரீர் விஜயோபூ4திர்
த்4ருவா நீதிர் மதிர் மம [அத். 18. 78]

யோகேஸ்வரனான கிருஷ்ணனும், வில்லேந்திய விஜயனும் எங்கெங்கு இருப்பரோ, ஆங்கே செல்வமும் வெற்றியும் நிலைத்த நீதியும், கீர்த்தியும், நிலவும் என்பதே என் கருத்து.



கீதை படித்த நாம் என்ன செய்யப்போகிறோம் ?

ஸ்ரீமத் பகவத்கீதை நம் அன்றாட வாழ்க்கைக்கு ஒரு உயர்ந்த வழிகாட்டி நூலாகும். கீதையைப் படித்த பயனை உருப்படியாக அடைய வேண்டுமென்றால், நாம், கீழ்கண்டவாறு ஹிந்து பண்பாடுகளுடன் வாழ்கிறோமா? என்று நம்மை நாமே கேட்டு, பிடிவாதமாக பதில் பெறவேண்டும்.

1. அதிகாலை 5 மணிக்குள் எழுந்து விடுவோம். ஏனெனில், அப்பொழுது காற்று மண்டலத்தில் ஓஜான் எனும் ஆரோக்கிய குணம் மிகுந்திருக்கிறது.

2. காலையில் தியானம், உடற்பயிற்சி இவற்றை தவறாது செய்வோம். ஏனெனில், நோய்களை எதிர்க்கும் பிராண சக்தி நமக்கு வளர இவ்விரண்டும் ராஜ பாட்டைகளாகும்.

3. அளவான சாத்வீக உணவே உண்போம். விரத நாட்களில் உபவாசமிருப்போம். ஏனெனில், எல்லா வியாதிகளுக்கும் முக்கிய காரணம் தவறான உணவுப் பழக்கமே! நாவிற்கு அடிமையானவன் டாக்டருக்கு அடிமையாவது உறுதி. உபவாசம் மனோ பலத்தை வளர்க்கிறது.

4. சோம்பலை விரட்டி, உற்சாகமாக உழைப் போம். ஏனெனில், நம் எதிரி வெளியில் இல்லை. சோம்பலும், அசட்டையும் நம் முதல் எதிரிகள். உற்சாகத்துடன் ஈடுபட்ட எந்த வேலையும் எளிதில் முடிந்து விடுகிறது.

5. வீண் ஆடம்பரங்களிலும் சுகபோகங்களிலும் சிக்கமாட்டோம். எளிய வாழ்வும் ஏற்றமிகு எண்ணமும் பேணுவோம். ஏனெனில், ஆடம் பர வாழ்க்கையில் வீழ்ந்தவன் சீரழிவது திண்ணம், திண்ணம்.

6. பேச்சில் இனிமையும், உண்மையும் வளர்ப் போம். செயலில் அன்பும் பண்பும் பெருக்கு வோம். ஏனெனில் இனிமையும், அன்பும் காசுச் செலவில்லாத அளப்பரிய சக்திகளா கும்.

7. பெரியோரை வணங்குவோம். சிறியோரை நேசிப்போம். ஏனெனில் அஹங்காரம் தான் நம் முன்னேற்றத்திற்கு பெரிய தடைக்கல்.

8. சக்திக்கேற்ப, வள்ளல் உள்ளத்துடன் எளியோர்க்கு சேவை செய்வோம். ஏனெனில் பரோபகார வாழ்வில் கிட்டும் இன்பம் அளவிட வொண்ணாதது.

9. பிறவிப்பயன் பெற ஆன்மீக பசி கொள்வோம். ஏனெனில் பாரத புண்ய பூமியில் பிறந்த நம் ஒவ்வொருவர்க்கும், "மோக்ஷம் நமதுபிறப் புரிமையாகும்".

10. ஹிந்து தர்மம் காப்போம்—ஹிந்துக்களாக வாழ்வோம். ஏனெனில் எந்தையும் தாயும் மகிழ்ந்து வாழ்ந்த உயர்ந்த மதம் இது.

நமக்குத்தான்

இவையாவும், எனக்கும், உங்களுக்கும் தான் கூறப்பட்டவை. நமக்கேதான்.

செயல்படுவோம்! சுகம் பெறுவோம்!

கேளுங்கள் - சொல்லப்படும்

இந்த நூல் பகவத் கீதையின் அறிமுகமே.

விரிவான விளக்கங்களுடன் வெளி வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவனம், ஸ்ரீ லிப்கோ முதலியோர் வெளியிட்டுள்ள கீதையை வாங்கி ஆழ்ந்து படிக்கலாம்.

தங்களுக்கு ஏதேனும் கருத்துக்கள் புரியவில்லை என்ருல், அல்லது ஐயம் ஏற்பட்டால், விளக்கம் கேட்டு எமக்கு எழுதுங்கள். எங்கள் செலவில் பதில் அனுப்பிவைக்கிறோம்.

C. K. நரஸிம்ஹாசாரி,
தலைவர், ஸ்ரீ பரமானந்தபுரி ஆஸ்ரமம்,
48, காமராஜர் சாலை, மதுரை-625 009.

இந்நூல் ஆசிரியர்......



ஹிந்து ஆலய பாதுகாப்புக் குழுவின் நோக்கங்களில் ஒன்றான ஹிந்து தர்ம கோட்பாடுகளை பிரசாரம் செய்யும் முகத்தான் இச்சிறு நூலை மாநிலத் தலைவர் **ஸ்ரீ C. K. நரஸிம்ஹாசாரி** எழுதியுள்ளார்.

தார்மீகப் பணிகளில் ஈடுபாடு கொண்ட இவர், ஒரு பிரபல ஜவுளி மில்லின் விற்பனைத்துறை அதிகாரியாக இருந்து வருகின்றார்.

கல்கத்தா பாங்குர்சேட் அவர்களின் அறப்பணிகளின் கௌரவ சேவைகள் பல செய்து வருகிறார்.

ஸம்ஸ்கிருத, ஹிந்தி தர்ம பாடசாலைகள் நடத்தி, தினசரி கீதை, உபநிடதங்கள் ஆகிய உயர் நூல்களின் சத்சங்கங்களைச் சிறப்பாக செய்து கொண்டிருக்கும் மதுரை, 48, காமராஜர் சாலை, **ஸ்ரீ பரமானந்தபுரி ஆஸ்ரமத்தின்** தலைவராக சேவை செய்து வருகிறார்.

பூஜ்ய ஸ்ரீ ஸித்த நரஹரி ஸ்வாமிகள் தலைமையில் இயங்கி, ஹிந்து தர்ம கல்வி, கலாசார ஆத்மீகப் பணிகளில் சேவையாற்றிவரும் மதுரை, **ஸ்ரீ ஸித்தாஸ்ரமத்தின்** செயலாளர்.

ஹிந்து நலன் காக்க சத்யாக்ரஹம் செய்து சிறை அனுபவித்தவர்.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, ஸம்ஸ்க்ருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் R. S. S. சங்கம் முதலிய சமுதாய ஸ்தாபனங்களிலும் ஈடுபட்டு பணி புரிகிறார்.

ஓம் தத் ஸத்